# நான் அவர்களை நேசிச்சிறேன் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்

## தேவன் உங்கள்மீது வைத்த அன்பின் வெளிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஜாய்ஸ் மேயர்

நியூயார்க் டைம்ஸின் சிறந்த விற்பனையாளர்களில் முதலிடம் பிடித்தவர்

# நான் அவர்களை நேசிச்சிறேன் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்

# நான் அவர்களை நேசிச்சிறேன் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்

## தேவன் உங்கள்மீது வைத்த அன்பின் வெளிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

## ஜாய்ஸ் மேயர்

JOYCE MEYER MINISTRIES®

Nanakramguda, Hyderabad - 500 008

Unless otherwise indicated, all Scripture quotations are taken from The Amplified® Bible (AMP). Copyright © 1954, 1962, 1965, 1987 by The Lockman Foundation. Used by permission.

Scriptures marked NKJV are taken from the New King James Version. Copyright © 1979, 1980, 1982 by Thomas Nelson, Inc.

Scriptures marked KJV are taken from the King James Version of the Bible.

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda,
Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Tell Them I Love Them - Tamil

*The Simple Truth About God's Love for you*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad-500 004

# பொருளடக்கம்


முன்னுரை vii

1. தேவன் உங்களை நேசிக்கிறார்! 1

2. நான் நல்லவன்தானா? 7

3. அன்பு என்பது ஒரு உறவு 17

4. அன்பு, நம்பிக்கை, விசுவாசம் 24

5. பயத்திலிருந்து விடுதலை 31

6. உள்ளங்களைத் தொடும் அன்பு 37

7. உள்ளங்களைத் தொடும் தேவனின் அன்பு உங்களை மாற்றும் 45

புது வாழ்வை அனுபவியுங்கள் 51

# முன்னுரை

தேவன் தனிப்பட்ட முறையில் தங்களை நேசிக்கிறார் என்ற வெளிப்பாட்டைப் பெறுவதே மக்களின் எல்லாவற்றிற்கும் மேலான தேவை என்று நான் நம்புகிறேன். ஒருவர் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு உறுதியாக நிற்க வேண்டிய அடித்தளம் இதுதான் என்றும் நம்புகிறேன். தேவனின் அன்பைப் பற்றி அறிவுப்பூர்வமான ஒரு விளக்கம் நமக்குத் தேவையில்லை; ஒரு வெளிப்பாடுதான் தேவை. ஒவ்வொரு விசுவாசியும் தேவனின் அன்பைக்குறித்துத் தியானிக்கும்போதும், தேவனின் அன்பைத் தன் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போதும், அந்த வெளிப்பாட்டை எழுதப்பட்ட தேவனின் வார்த்தையின் மூலமும், ஜெபத்தின் மூலமும் தேடும்போது மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் இது கொடுக்கப்படுகிறது.

தம்முடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகுக்காக மரிக்க அனுப்பும் அளவிற்குத் தேவன் இந்த உலகம் முழுமையையும் நேசிக்கிறார் என்று ஏற்றுக்கொள்வது ஓரளவு இலகுவான காரியம். ஆனால் நீங்கள் ஒருவர் மட்டுமே இந்த உலகில் வசிப்பதாக

இருந்தால்கூட தேவன் உங்களை அதிகமாக நேசித்து இயேசுவை உங்கள் ஒருவருக்காக மட்டுமே அனுப்பியிருப்பார் என்று நம்புவது கொஞ்சம் கடினமான காரியம்.

மனமடிவுற்ற கிறிஸ்தவளாகப் பல வருடங்களைக் கழித்த பின்னரே, தேவனின் அன்பை நான் உணர்ந்துகொண்டேன். தேவன் என்மீது கொண்ட தனிப்பட்ட அன்பை, பரிசுத்த ஆவியானவரின் மூலம் எனக்குத் கிருபையாக வெளிப்படுத்தினார். அந்த ஒரு வெளிப்பாடு என்னுடைய முழு வாழ்க்கையையும், நான் அவரோடு நடப்பதையும் மாற்றி அமைத்தது.

நீங்கள் இந்தப் புத்தகத்தில் படிப்பவை தேவனுடைய அன்பைப்பற்றின புதிய ஆழ்ந்த கருத்துகளையும், அறிவையும் உங்களுக்குத் தரும் என நம்புகிறேன். இந்த வெளிப்பாட்டினை உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்வதற்கான புதிய ஆவலை உங்களுக்குள் உண்டாக்கும் என்றும் நம்புகிறேன். இந்தப் புத்தகத்தை நீங்கள் மெதுவாகப்படித்து, கற்றுக்கொள்வதற்குக் கருவியாகப் பயன்படுத்தி, இதன் பின்வரும் பக்கங்களில் காணப்படுகிற வேதப்பகுதிகளையும், சிந்தனைகளையும் தியானிக்கவேண்டுமென்று நான் உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன்.

தேவனில்லாமல் நான் ஒன்றுமில்லை என்பதையும் அவருடைய வார்த்தையைக் குறித்து நான் அடைந்த வெளிப்பாடுகளும், உணர்ந்த கருத்துகளும் அவருடைய கிருபையால் பெற்றவை என்பதையும் நான் அறிந்து, இந்தப் புத்தகத்தை மிகவும் பணிவாக உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

# நான் அவர்களை நேசிச்சிறேன் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்

# 1

# தேவன் உங்களை நேசிக்கிறார்!

*“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”*

— யோவான் 3:16

தேவன் தமக்கு ஒரு குடும்பம் வேண்டுமென்று விரும்பிய தால், நம்மை அவருடைய பிள்ளைகளாக உருவாக்கினார். நாம் மிகவும் சிறு குழந்தைகளைப்போல் நடந்துகொள்வதை அவர் விரும்பவில்லை, ஆனால் நாம் அவருடைய பிள்ளைகளாக நடந்துகொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் அவரைச் சார்ந்திருக்கவேண்டும், அவரை நம்பியிருக்கவேண்டும், அவர்மீது சாய்ந்திருக்கவேண்டும், அவரை நேசிக்கவேண்டும், *அவர் நம்மை நேசிக்க இடமளிக்கவேண்டும்* என்று அவர் விரும்புகிறார். நமக்கு ஒரு தேவை ஏற்படும்பொழுது நாம் அவரை நம்பி அவரைத் தேடிச்செல்லவேண்டும் என்று அவர் விரும்புகிறார். உங்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்வதற்கு அவர் விரும்புகிறார்.

நம்மில் பலரும் யோவா. 3:16 ஐ மிகவும் பரந்த நோக்கத்தில் எடுத்துக்கொள்கிறோம். “ஆம், இயேசு இந்த உலகத்துக்காக மரித்தார் என்பதை நான் அறிவேன், ஆனால் உலகில் இருக்கும் ஒரு கூட்டம் பொதுவான மக்களுக்காக அவர் மரிக்காமல், நம் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார். *அவர் உங்களுக்காக மரித்தார்!*”

இந்த உலகத்தில் நீங்கள் ஒருவர் மட்டுமே இருந்திருந்தாலும், அவர் **உங்களுக்காக** மட்டும் மரித்திருப்பார். **உங்களுக்காக** அவர் எல்லாப் பாடுகளையும் அனுபவித்திருப்பார். அவர் **உங்களுக்காக** மரித்தார்! தேவன் **உங்களை** அதிகமாக நேசிக்கிறார். அவர் என்றும் அழியாத நித்திய அன்போடு **உங்களை** நேசிக்கிறார்.

ஒரு நாள் நான் ஒரு சாலையில் காரில் சென்றுகொண்டிருக்கும்போது, தேவன் என் உள்ளத்தில் பேசினார். அவர் “ஜாய்ஸ், நீ என்னுடைய கண்ணின் கருவிழி” என்று கூறினார். இது வேதபுத்தகத்திலுள்ள வேதவாக்கியம் என்பதுகூட எனக்குத் தெரியாமலிருந்தது. இதைத் தொடர்ந்து சாத்தான் என்னிடம் வந்து “நல்லது, இது பெருமை அல்லவா? நீ உன்னை யாரென்று நினைக்கிறாய்?” என்று சொன்னான். எனவே “நான் அவ்வாறு நினைக்கக்கூடாது” என்று எண்ணிக்கொண்டேன். நாம் மிகவும் சிறப்பானவர்கள், நாம் வரங்களைப் பெற்றவர்கள், மற்றவர்களைவிட நாம் வித்தியாசமானவர்கள் என்பவற்றை உணர்ந்து கொள்வது உலகப்பிரகாரமான எண்ணங்களுக்கு எதிரானவை. நாம் ஒவ்வொருவரும் நமக்கு அருகில் இருப்பவர்களைவிட வேறுபட்டவர்களாக இருக்கும்படி நம்முடைய பிதாவினால் உருவாக்கப்பட்ட தனி நபர்.

நான் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஒரு பல்பொருள் அங்காடியில் குவித்து வைக்கப்பட்ட ஆப்பிள் பழங்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஒரு பெண் மணியைத் தேவன் என் மனக்கண்ணில் காட்டினார். அவள் எல்லாவற்றையும் பார்த்து

அவற்றுள் உண்மையாகவே நன்றாக இருந்த ஒரு பழத்தைக் கண்டுபிடித்து, அதை எடுப்பதற்காகக் குனிந்தாள். தேவன் என்னிடம் கூறியது என்னவென்றால் அவருக்கு நான்தான் மிகச்சிறந்த ஆப்பிள் பழம். நான் சிறப்பானவள். அது சரியாகத் தோன்றாவிட்டாலும், பாருங்கள், தேவன் நம் ஒவ்வொருவரிடமும் இதைத்தான் கூறுகிறார். இதனால் நீங்கள் மட்டும்தான் அவருக்குச் சொந்தமானவர்கள்; மற்றவர்களெல்லாம் எந்தப் பயனுமற்றவர்கள் என்று கூறுகிறார் என்பதல்ல, நாம் எல்லோரும் சிறப்பானவர்கள் என்று அவர் கூறுகிறார். அது வேதவசனத்தில் உள்ளது, அந்த வேதவசனம் நம் ஒவ்வொருவருக்கும் உரியது. *நீங்கள் தேவனுடைய* ***கண்மணிகள்.***

என்னைப் பற்றிய நன்மையானவற்றைச் சிந்திப்பது குற்றமென நான் நினைத்ததால், தேவன் என்னிடம் கூறிய வற்றை நான் சரியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டு நாட்களுக்குப்பின் நான் என் வேதபுத்தகத்தைத் திறந்தபோது சங். 17:8,9 என் கண்ணில்பட்டது; அது என்னைத் திகைக்க வைத்தது: “கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்... உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.” நான் சொன்னேன், “ஆ! அது தேவனின் குரல்தான். நான் அவருடைய கண்ணின் **மணி**தான்.” அதன்பின் வெகுகால மாக ஒவ்வொருமுறை நான் இதை நினைக்கும்போதும் என்னைச் சிறப்பானவளாக உணர்வதுண்டு.

தாங்கள் பிறரால் நேசிக்கப்படவேண்டுமென்ற அடங்காத ஆசை, பேரவா, விருப்பம் மக்களுக்கு உண்டு. தேவன் நம்மை அப்படித்தான் படைத்திருக்கிறார். அநேக மக்கள், தேவன் உலகத்தை நேசிக்கிறாரென்றும் இயேசுகிறிஸ்துவை நேசிக்கிறார் என்றும் நம்புகிறார்கள். ஆனால் தேவன் தங்களை நேசிக்கிறார் என்று நம்புவது அவர்களுக்குக் கடினமாக இருக்கிறது. ஆனாலும் தேவன் இயேசுவை நேசிக்கும் அளவிற்கு அவர்களையும் நேசிக்கிறார் என்று

அவருடைய வார்த்தை போதிக்கிறது. அவர் இயேசுவை நேசிப்பது போலவே உங்களையும் நேசிக்கிறார். யோவா. 5:20 ஐப் பார்ப்போம். "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்."

இங்கு தேவன் "நான் இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் இயேசு மூலமாகச் செய்கிறேன். நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக, இதைவிடப் பெரிய காரியங்களையும் இயேசு மூலம் செய்வேன்" என்று கூறுகிறார். சில காரியங்களைப் பார்த்து அதிசயிப்பதும், தேவன் செய்வனவற்றைக் குறித்து பயபக்தியோடு ஆச்சரியப்படுவதும் நல்லது என்பது உங்களுக்குத் தெரியுமா?

நாம் இந்த வேதப்பகுதிகளை வாசித்தபோதிலும் தேவன் நமக்குச் செய்ய விரும்புவதை அடிக்கடி கவனிக்காமல் போகிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலம் அவர் செய்கிற பெரிய காரியங்களை நாம் பார்த்து, பிரமித்து, "தேவனே, இயேசு கிறிஸ்துவின் மூலம் நீர் செய்தது மிகவும் அதிசயமானது" என்று கூறவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதன்பின் நீங்கள் வேதபுத்தகத்தைத் திறந்து யோவா. 14:12ல் "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." என்று இயேசு கூறியுள்ளதைப் படிக்கவேண்டு மென்று தேவன் விரும்புகிறார்.

தேவன் அதே காரியங்களை உங்களைக்கொண்டும் செய்வார், இயேசு பிதாவினிடத்திற்குப் போனபடியால் இதைவிடப் பெரிய காரியங்களையும் நீங்கள் செய்வீர்கள். நீங்கள் இதை நம்புகிறீர் களா? தேவன் உங்களை நேசிக்கிறார் என்றும் உங்களைப் பயன்படுத்துவார் என்றும் உண்மையாகவே நம்புகிறீர்களா?

ஒருநாள் நான் படித்துக்கொண்டிருந்தபோது கர்த்தர் என்னிடம் “ஜாய்ஸ், நான் மக்களை நேசிக்கிறபடியால் தினந்தோறும் அநேக காரியங்களை அவர்களுக்காகச் செய்கிறேன், ஆனால் அவர்கள் அதைக் காண்பதுமில்லை, ஒருபோதும் கண்டு உணர்வதுமில்லை. நான் உனக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு தருகிறேன். தினந்தோறும் நான் சூரியனைப் பார்த்து ‘உதி’ என்று சொல்லும்போது, அதை ஜாய்சுக்காகவும், மேரிக்காகவும், ஜெமிக்காகவும் (உங்கள் பெயரைச் சேர்த்துக் கொள்ளுங்கள்) செய்தேன்” என்று சொன்னார்.

சற்று நின்று அதைப்பற்றிச் சிந்தியுங்கள். சூரியன் தினந்தோறும் உங்களுக்காக வானத்தில் உதிக்கிறது. ஆம், சூரியன்தான்! அது அப்படித்தான் நடக்கும் என்று எடுத்துக் கொள்ளுகிறோம். சூரியன் தினந்தோறும் வானத்தில் வரும் என்பது நமக்குத் தெரியும், ஆனால் அது உதிப்பது உங்களுக்காக. மழை பெய்யவேண்டிய காலத்தில் அது உங்களுக்காகப் பெய்கிறது, பனி வரவேண்டிய காலத்தில் அது உங்களுக்காக வருகிறது. அந்த அளவுக்குத் தேவன் உங்களை நேசிக்கிறார்.

உபா. 7:9 இல் “ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்” என்று வேதம் கூறுகிறது. நீங்கள் தேவனின் அன்பை உணர்வதற்கு ஆயிரம் தலைமுறை மிக அதிகமானது என்று எண்ணுகிறீர்களா? பாருங்கள், அவர் நித்திய நித்தியமாக இருக்கிற தேவனாயிருக்கிறபடியால், அவரைச் சோர்வடையச் செய்ய உங்களால் முடியாது. நம்முடைய தோல்விகளாலும், குழப்பங் களாலும் நாம் தேவனைச் சோர்வடையச் செய்துவிட்டோம் என்று நம்மில் அநேகர் எண்ணுகிறோம், ஆனால் உங்களால் அதைச் செய்ய இயலாது. அன்பு ஒருபோதும் சோர்ந்துபோகாது. தேவன் உங்களை நேசிக்காதபடி

செய்ய உங்களால் முடியாது. அன்பு என்பது தேவன் செய்கிற ஒரு செயலன்று, அவரே அன்பாயிருக்கிறார்.

இயேசுவின் முகத்தில் துப்பி “எனக்கும் உமக்கும் ஒன்று மில்லை; நான் நரகத்துக்குப் போவது எனக்குத் திருப்திதான்” என்று கூறுகிற, இவ்வுலகில் வாழ்கின்ற மாசுபடிந்த கெட்டுப் போன பாவியைக்கூட, தேவன் நேசிக்கிறார். அப்படியானால், தேவனு டைய நோக்கத்துக்கென்று தெரிந்தெடுக்கப்பட்டு, பிரித் தெடுக்கப்பட்டவர்களை அவர் நேசிக்காமல் இருப்பது எப்படி?

“நான் இயேசுவை என்னுடைய உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அவரை நேசிக்கிறேன்” என்று நீங்கள் ஏற்கெனவே கூறியிருக் கலாம். *‘ஆனால் தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை எந்த அளவுக்கு நம்புகிறீர்கள்?’* என்று நான் உங்களிடம் கேட்கிறேன்.

இது உங்களுக்கான மிக எளிய செய்தி : “*தேவன் உங்களை நேசிக்கிறார்*. ஆனால் இதுவே மற்ற எல்லாக்காரியங்களையும் நீங்கள் அறிந்துகொள்வதற்காக தேவன் உங்களில் போடக் கூடிய அடிப்படையான அஸ்திவாரம் ஆகும்.”

நீங்கள் வேறு எதைக் கற்றாலும், எவ்வளவு கடினமாகப் படித்தாலும், தேவனுடைய காரியங்களைத் தேடினாலும், தேவன் உங்களை நேசிக்கிறார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளாத வரையில் நீங்கள் முன்னேறிச் செல்ல முடியாது. உங்கள் விசுவாசத்திற்கும், நீங்கள் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும், பயமின்றி மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு முன்வருவதற்கும் தேவனுடைய அன்பே அடித்தளமாகும். *உங்கள் மீது அவர் வைத்துள்ள அன்பைப் பெற்றுக்கொள்வீர்களா?*

# 2

# நான் நல்லவன்தானா?

*"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப் படுத்தாது.*

*அன்றியும் நாம் (நமக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்ள) பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக (அக்கிரமக் காரருக்குப் பதிலாக) மரித்தார்.*

*நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்ல வனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான்.*

*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (மேசியா, அபிஷேகம்பண்ணப்பட்டவர்) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.*

*இப்படி, நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான் களாக்கப்பட்டிருக்க, (பாமில்லையென்று தீர்க்கப் பட்டிருக்க, தேவனுடன் சரியான உறவிற்குள் கொண்டு வரப்பட்டிருக்க)*

*கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

*நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவரு டைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புர வாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய (உயிர்த்தெழுந்த) ஜீவனாலே இரட்சிக்கப் படுவது (அனுதினமும் பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவது) அதிக நிச்சயமாமே"*

— ரோம. 5:5-10

நம்மில் அநேகர், நாம் தடுமாற்றமடையாதவரையில், **தவறு செய்யாதவரை**, தேவன் நம்மை நேசிக்கிறார் என்று நம்பமுடியும். அநேக மக்கள் தங்களைத் தாங்களே விரும்புவதில்லை. ஆகையால் தேவன் தங்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளமுடியாது என்ற முடிவுக்கு வருகின்றனர். ஆனாலும் "மனுஷனை நீர் நினைக்கிற தற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" (சங். 8:4) என்று வேதம் கூறுகிறது. நாம் எல்லாரும் தேவனால் படைக்கப்பட்டவர்கள். *அவர் நம்மேல் அன்பாகவே இருப்பதால் நம்மீது அன்பு செலுத்துகிறார்*. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா. 4:16).

அவர் உங்களை நேசிக்கிறார், *நீங்கள் **விசேஷமானவர்கள்***. அதாவது நீங்கள் வேறுபட்டவர்கள், தனித்தன்மையுடைய வர்கள். நீங்கள் என்னைப்போல் இருக்கவேண்டியதில்லை, நான் உங்களைப்போல் இருக்கவேண்டியதில்லை. நாம் வேறொரு வரைப்போல இருக்க முயற்சி செய்தால் நாம் **நிர்பந்தமாயிருப்போம்**. அவ்வாறு செய்வது சாத்தான் நம்மைப் பார்த்து, 'நீங்கள் நல்லவர்களல்ல' என்று கூறுவதற்கு வாய்ப்பளிப்பதாக இருக்கிறது.

உண்மை என்னவென்றால், தேவனைப் பொறுத்த அளவில், நீங்கள் 'நல்லவர்களாகத்தான் இருக்கவேண்டும்' என்பதில்லை.

நீங்கள் மிகச்சிறந்தவர்களாகவும், அற்புதமானவர்களாகவும் இருந்தபடியால்தான் இயேசு உங்களுக்காக மரித்தாரா அல்லது அவர் உங்களை நேசித்ததால் உங்களுக்காக மரித்தாரா? பாவிகளாயிருக்கும்போது உங்களுக்காக மரிக்கும் அளவிற்கு உங்களை நேசித்தார் என்றால், இப்பொழுது அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கும் உங்களை நேசிப்பது அதிக நிச்சயம் அல்லவா? (ரோம. 5:8-9) என்று வேதம் சொல்லுகிறது. தினந்தோறும் நீங்கள் செய்யும் சிறுசிறு பாவங்களை மூடுமளவிற்கு அவர் உங்களை நேசிக்கிறார். இந்த நாளில் உங்களைப் பலத்தோடும், வெற்றியோடும் நடத்திச் செல்லுமளவுக்கு அவர் உங்களை நேசிக்கிறார்.

ஒரு நாள் தேவன், நம்முடைய தவறுகளையும், குறைபாடு களையும் தாம் எப்படிப் பார்க்கிறார் என்பதை ஒரு எடுத்துக் காட்டு மூலம் எனக்கு விளக்கினார். தன்னுடைய தாயார் தன் வீட்டு வேலைகளைச் செய்வதை எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிற ஒரு மூன்று அல்லது நான்கு வயது சிறுமியைக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவள் தன்னுடைய தாயை அதிகமாக நேசித்தபடியால், ஒரு சிறிய வாளியில் தண்ணீரையும், துடைப்பதற்கு ஒரு துணியையும் எடுத்துக்கொண்டு முன்னறையிலுள்ள ஜன்னல் பக்கம் செல்கிறாள். அவள் ஜன்னலை நன்றாகத் தேய்த்துக் கழுவி, துடைப்பதற்குப் பயன்படுத்தும் தாள்களால் துடைத்து விடுகிறாள்.

அந்த ஜன்னல் சோப்பு நுரையுடனும், கோடுகளுடனும் மங்கலாக மாறியிருந்தது. மேலும் மிகவும் நல்ல துணியைப் பாழாக்கி இவ்விதம் செய்ததைப் பார்க்கும்போது குழந்தையை அடிக்கவேண்டும் என்று அந்தத் தாய்க்குத் தோன்றும். ஆனால் குழந்தை உள்ளே வந்து,

தன்னுடைய சிறிய, இனிமையான குரலில் "அம்மா, அம்மா நான் உங்கள் ஜன்னலைக் கழுவிவிட்டேன். நான் உங்களுக்காக அந்த வேலையைச் செய்தேன். அம்மா, நான் உங்களை நேசிக்கிறேன்" என்று கூறுகிறாள்.

எவ்வளவு கோபம் வந்தாலும், ஒரு அன்பான தாய் "மிகவும் நல்ல காரியம் செய்தாய், உன் உதவிக்கு மிக்க நன்றி" என்றுதான் கூறுவாள். பின்னால் அந்தக் குழந்தை வேறு ஏதாவது செய்யும்பொழுது, அந்த இடத்தைச் சுத்தப் படுத்திவிட்டு இன்னொருமுறை இவ்வித காரியத்தைச் செய்யாமலிருக்கும்படி அவளுக்கு எடுத்துக் கூறுவாள்.

தாமும் இதைத்தான் நமக்குச் செய்வதாக தேவன் என்னிடம் கூறினார். அவர் எப்பொழுதும் நாம் குழப்பியவற்றைச் சரி செய்கிறார். நீங்கள் எதைச் செய்தாலும் உங்களால் இயன்றவரை சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதையே தேவன் உங்களிடம் எதிர்பார்க்கிறார். உங்களால் செய்ய முடியாத ஒன்றை நீங்கள் செய்யவேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதில்லை. "தேவனே, நீர் சொல்லுவது சரி, நான் செய்வது தவறு. நான் முயன்று பார்த்தேன், ஆனால் என்னால் என்னை மாற்ற முடியவில்லை" என்று கூறுவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருப்பீர்களானால் அவர் உங்களை மாற்றுவார். ஏனென்றால் அவருடைய உதவியின்றி உங்களால் எதுவும் செய்ய முடியாது என்பதை அவர் அறிவார்.

> "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தை களைப் பேசுகிறார் (தேவனுடைய செய்திகளையே அறிவிக்கிறார்); தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்." (யோவா. 3:34,35)

ஒருநாள் நான் படித்துக்கொண்டிருக்கையில் மேற்கண்ட வசனத்தைத் தியானித்தபோது, தேவன் தம்முடைய ஆவியை அளந்து கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து மகிழ்ச்சியால் ஆரவாரித்தேன். அவர் நமக்கு இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று பகிர்ந்து கொடுப்பதில்லை.

அதற்குப் பதிலாக, "இதோ, என்னிடமுள்ள எல்லாவற்றை யும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். தேவனுடைய வல்லமையும், அன்பும் முழுமையாக இன்று உங்களுக்காக ஆயத்தமாயிருக்கின்றன. உங்களுக்குத் தேவையான யாவும் அவரிடம் உண்டு, நீங்கள் அதைத் தம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஏன்? ஏனென்றால் அவர் உங்களை நேசிக்கிறார். அதைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் தகுதியுடையவர்களாய் இருக்கவேண்டியதில்லை. ஏனென்றால் அதைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையவர்களாகும்படி நீங்கள் எதுவும் செய்ய முடியாது. நீங்கள் அழகானவர்களாகவோ அல்லது சாமர்த்தியமானவர் களாகவோ இருக்கவேண்டியதில்லை. தேவன் உங்களை நேசிப்பதால் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறார்.

உபா. 7:6,7 "வசனங்களில் நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக் கும்படி தெரிந்துகொண்டார்.

சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந் தீர்கள்." என்று தேவன் கூறுகிறார்.

தேவன் இஸ்ரவேலரைத் தமக்குச் விசேஷமான ஜனமாகத் தெரிந்துகொண்டார். இன்று சபையாகிய நாமே உண்மையான ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். எனவே, இந்த வசனங்கள் அவர்களுக்கு எந்தளவு சொந்தமோ அதேபோல உங்களுக்கும் சொந்தமானவை. அவர் "நீங்கள் பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் திரட்சியான ஜனமென்று உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை" என்று கூறுகிறார். நம்மைப் பொறுத்தவரை அவர் கூறுவது "நீங்கள் எல்லாவற்றையும் சரியாகச் செய்தீர்கள் அல்லது நீங்கள் மிகவும் அற்புதமான வர்கள் என்பதால் நான் உங்களைத் தெரிந்தெடுக்கவில்லை" என்பதாகும்.

மேலும் அவர்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந் தார்கள் என்று அவர் தொடர்ந்து கூறுகிறார். சரியாகச் சொன்னால், நீங்கள் என்னைப்போல் இருந்தீர்களானால், நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு உங்களை எல்லாரிலும் மோசமானவர்கள் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனாலும் உபா. 7:8 இல்

"கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்ப தினாலும், கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப் பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும், அதின் ராஜா வான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார்" என்று தேவன் கூறுகிறார்.

இது ஆர்ப்பரிக்கவேண்டிய காரியம்! "நான் என்னுடைய அன்பை உங்கள் மேல் வைத்து, நீங்கள் பரிசுத்தமானவர்கள் என்றேன். நீங்கள் மிகவும் விசேஷமானவர்கள் என்றேன். நீங்கள் நல்லவர்களாகவும் அதிசயப்படத்தக்கவர்களாகவும் இருந்த படியால் நான் உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை, ஆனால் நான் உங்களை நேசித்தபடியால் உங்களைத் தெரிந்து கொண்டேன்." என்று தேவன் சொல்லுகிறார். இன்று நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்

என்பது உங்களுக்குத் தெரியுமா? அவருடைய அன்பை ஏற்றுக் கொண்டு, அதை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

நம்மில் அநேகரிடமுள்ள மிகப்பெரிய பிரச்சினை என்ன வென்றால், நம்மை நாமே விரும்புவதில்லை. தேவன் நம்மை நேசிக்கிறார் என்றோ, வேறொருவர் நம்மை நேசிக்கிறார் என்றோ நாம் நம்புவதில்லை. *இவ்வளவு மோசமான நம்மை அவர்களால் எப்படி நேசிக்க முடியும்* என்று நாம் நினைக்கி றோம். நீங்கள் வெறுக்கத்தக்கவர்களாகவும், அழகற்றவர்களா கவும் இருப்பதாக நீங்கள் நம்பினால், உங்கள் நினைவிலும் செயலிலும், நடத்தையிலும் அவ்வாறே இருப்பீர்கள். உங்களைப் பற்றி நீங்கள் கற்பனை செய்திருக்கிறதைவிட உயர்ந்த நிலைக்கு உங்களால் வரமுடியாது.

என்னிடமுள்ள மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் நான் என்னை விரும்பவில்லை, ஆதலால் என்னுடைய நேரத்தில் முக்கால் பாகத்தை என்னை மாற்றுவதற்கு முயற்சிப்பதிலேயே செலவிட்டேன். நான் அதிகமாகப் பேசுவதாக எண்ணினதால் அமைதியாக இருக்க முயற்சித்தேன். ஆனால் நான் அமைதியாக இருந்தால் மகிழ்ச்சியற்றவளாகிவிடுவேன். மேலும் எல்லாரும் நான் ஏன் அமைதியாக இருக்கிறேன் என்று அறிய விரும்புவார்கள். நான் என்னுடைய மனதில், '*நீங்கள்தானே நான் அதிகம் பேசுவதாகக் கூறினீர்கள். என்னைத்தனியே விட்டுவிடுங்கள். நான் அமைதியாயிருக்க முயற்சி செய்கிறேன்*' என்று நினைத்துக்கொள்ளுவேன்.

நான் எத்தனை வருடங்களை இவ்விதம் கழித்தேன் என்று என்னால் கூறமுடியாது, ஆனால் இன்னும் என்னுடைய பேச்சினால் நான் பிரச்சினைகளில் மாட்டிக்கொள்வதுண்டு. அதிகம் பேசுகிற பழக்கமுள்ள அநேகர், மிகவும் அமைதலாக இருக்கிறவர்களை

வாழ்க்கைத் துணையாகக் கொண்டிருக் கிறார்கள். அது உங்கள் வாயாடித்தனத்தை மிகைப்படுத்திக் காட்டும், சாத்தானும் அடிக்கடி அதைப்பற்றி நினைவுபடுத்திக் கொண்டிருப்பான். இதுவே கண்டனம் செய்யப்படுவதாகும்.

கண்டனம் செய்யப்படுவதிலிருந்து நீங்கள் விடுதலையடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், ஆனால் விடுதலை யாக்கப்படுவதற்கு விசுவாசமும், தைரியமும் தேவை. நீங்கள் எவ்வளவு குற்றவுணர்வுள்ளவர்களாக இருந்தாலும் அது நீங்கள் செய்த ஒரு தவறையும் ஈடு செய்ய முடியாது என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தவறு செய்திருந்த போதிலும் தேவன் உங்களை நேசிக்கிறார் என்று நம்புவது உண்மையிலேயே மிகவும் கடினமான காரியம்.

பிசாசானவன் எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் எவ்வளவு கெட்டவர்கள், வெறுப்புக்குரியவர்கள், அழகற்றவர்கள் என்ற எண்ணங்களால் உங்களை வருத்திக்கொண்டே இருப்பான். "நீ தவறு செய்துவிட்டாய், நீ யாரென்று நினைத்து இதைச் செய்தாய்? அழுக்கானவனே, உன்னைத் தேவன் ஒருபோதும் ஆசீர்வதிக்கமாட்டார். இப்பொழுது நீ யாருக்கும் சாட்சியாக இருக்க முடியாது, உன்னால் எந்தக் காரியத்தையும் சரியாகச் செய்ய முடியாது" என்று கூறுவான்.

அந்த நேரத்தில்தான் நீங்கள் தைரியமாக உங்களுக்குள் பெலன் கொண்டு "அப்பா, நான் தவறு செய்துவிட்டேன், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் என்னை மன்னிக்கும்படி உம்மை வேண்டுகிறேன். உண்மையாகவே உள்ளத்தின் ஆழத்திலிருந்து உம்முடைய மன்னிப்பை வேண்டுகிறேன்." என்று ஜெபித்து, பின்னர் சாத்தானை நோக்கி "பிசாசே, நீ விரைந்து ஓடிப்போ. இயேசு என்னுடைய பாவங்களுக்காக யாவற்றையும் செலுத்திவிட்டார், உனக்கு இதில் சம்பந்தமில்லை, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ" என்று கூறவேண்டும். அதன்பின்

நீங்கள் மனநிறைவுடையவர்களாய் மகிழ்ச்சியாக இருங்கள். ஆனால் நீங்கள் ஒருவேளை "இதே முட்டாள்தன மான காரியத்தைத்தானே மீண்டும் மீண்டும் செய்கிறேன்" என்று நினைக்கலாம். என்னை நானே குற்றவாளியாகக் கருதுவதை நிறுத்தும்வரையில் நானும் அவ்வாறுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். *நீங்கள் செய்த ஒரு காரியத்தைக் குறித்துக் குற்றமனப்பான்மையுடன் இருப்பதை நிறுத்திவிட்டால், நீங்கள் இவ்விதம் எண்ணுவதை நிறுத்திவிடலாம்.*

குற்றமனப்பான்மையும், கண்டனமும் நீங்கள் அதிலிருந்து விடுதலை பெறமுடியாத அளவுக்கு உங்களைச் சோர்வடையச் செய்துவிடும். மிகவும் தைரியமுள்ள ஒருவரால்தான் கண்டனத்துக் குள்ளாகாமல் இருக்கமுடியும். நீங்கள் தைரியமாக விசுவாசத் தில் செயல்பட்டு, *குற்றமனப்பான்மையை* உங்களிடமிருந்து அகற்றவேண்டும். "நீ அதைக்குறித்து வருத்தப்படக்கூட மாட்டாயா? சிலமணி நேரங்களாவது நீ அதைக்குறித்து வருத்தப்பட வேண்டுமல்லவா? உண்மையிலேயே நீ செய்தது தவறான காரியம்" என்று பிசாசானவன் கூறுவான். அதற்கு நீங்கள் "இல்லை, இல்லவே இல்லை. நான் அதைக் குறித்து வருத்தப்படப் போவதில்லை" என்று கூறவேண்டும். முதல் சில தடவைகள் இது கடினமாக இருக்கும். மூன்று அல்லது நான்கு தடவைகளுக்குப்பின் அது உங்களுக்குப் பழகிவிடும்.

ஏசாயா 53:5,6,11 வசனங்களில் இயேசு நமக்காக நம்முடைய பாவங்களைச் சுமந்தபோது நம்முடைய குற்றங்களையும் சுமந்தார் (ஆக்கினைத்தீர்ப்பும் இதில் அடங்கும்). ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து நீங்கள் விடுதலையாவதைப் பிசாசானவன் விரும்பமாட்டான். ஏன்? ஏனென்றால் நீங்கள் கண்டனம் செய்யப்பட்டால் தேவஅன்பை அனுபவிக்க முடியாது. ஆக்கினைத்தீர்ப்பென்பது உங்களைத் தேவனிடமிருந்து பிரித்து உங்களுக்கும், தேவனுக்குமிடையே ஒரு

இரும்புத்திரை போலாகிவிடும். நீங்கள் குற்ற உணர்வுள்ளவர்களாக நிற்கும்போது பிதாவாகிய தேவனைத் தரிசிக்க முடியாது. உங்களுக்கு முன்பாக உங்கள் குற்றங்களும் பாவங்களும் மட்டுமே உங்களுக்குத் தெரியும்.

உங்கள் பாவங்களை மூட அவருடைய கிருபை போதும் என்று தேவன் கூறியதை நம்பி, **ஆக்கினைத்தீர்ப்புக்கு** விலகி, சுதந்திரமாக நடப்பீர்களாக. அவர் உங்களை நேசிக்கிறார். அவருடைய கிருபையும், மன்னிப்பும் இலவசமான அன்பளிப்பு களாகும். அவற்றை இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்!

# 3

# அன்பு என்பது ஒரு உறவு

*"தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து (அடையாளம் கண்டு, புரிந்துகொண்டு, மனமார உணர்ந்து, அனுபவத்தாலும் கூர்ந்து கவனிப் பதாலும்) விசுவாசித்திருக்கிறோம் (பற்றிக்கொண்டுள் ளோம், நம்பிக்கை கொண்டுள்ளோம்). தேவன் அன்பாகவே இருக்கிறார், அன்பில் நிலைத்திருக் கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்"*

— 1 யோவான். 4:16

நீங்கள் எப்படி தேவனுடைய அன்பைப்பற்றி அதிக உணர் வுள்ளவர்களாகவும், அதை அறிந்தவர்களாகவும் இருக்க முடியும்? அவர் உங்களை எந்த அளவுக்கு நேசித்தாலும், நீங்கள் அதைப்பற்றி உணர்வில்லாதவர்களாகவும், அதை அறியாதவர் களாகவும் இருக்கும்வரை அதனால் எந்த நன்மையும் விளையாது. யாராவது ஒருவர் உண்மையிலேயே உங்கள்மீது அதிக அன்பு செலுத்துவதை

அறிந்தால் அது உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி அளிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவர் உங்களை நேசிக்கிறார் என்பதை அறிந்தால் நீங்கள் உலகத்தைத் தலைகீழாக்கிவிடும் அளவிற்கு ஆனந்தத்தையும், அதிசயத்தையும் உணர்வீர்கள். தேவன் உங்களை நேசிப்பதோடு அந்த நேசத்தை உங்களுக்குக் காட்டவும் விரும்புகிறார். நீங்கள் அனுதினமும் சிறிது நேரமாவது அவரோடு செலவழிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

தேவனோடு உங்களுக்கு உண்மையான தனிப்பட்ட உறவு உண்டா? நீங்கள் முன்னொரு காலத்தில் இரட்சிக்கப்பட்டீர்கள் என்பதால் நீங்கள் தேவனோடு ஐக்கியம் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்ல முடியாது. நான் காலையில் கண்விழிக்கும்போது முதன்முதலில் தேவனைப் பற்றித்தான் சிந்திப்பேன், இரவில் படுக்கப்போகுமுன் நான் கடைசியாகச் சிந்திப்பதும் தேவனைப் பற்றித்தான். நாள் முழுவதும் இடைப்பட்ட நேரங்களிலும் தேவனைப் பற்றிச் சிந்திப்பேன். இந்தப் பரந்த உலகத்தில் என் தேவனுக்கு ஊழியம் செய்து அவரை மகிழ்விப்பதைவிட வேறு எதையும் நான் விரும்பவில்லை. நீங்கள் அதைப் பெறுவதற்காக எதை வேண்டுமானாலும் இழக்கும் அளவிற்கு அது சிறந்தது.

நமக்குள் தேவனுக்கென்று, அவரால் மட்டுமே நிரப்பக்கூடிய ஒரு வெறுமையான இடம் இருக்கிறது. நீங்கள் தேடி ஓடுகிற அல்லது விரும்புகிற வேறு எதுவும் அந்த இடத்தை நிரப்ப முடியாது. ஒருவேளை “நான் ஏற்கெனவே இயேசுவை ஏற்றுக் கொண்டேன் என்று எனக்குத் தெரியும்” என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவரை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? நீங்கள் தேவனின் அன்பைப் பெற்றுக் கொள்ளுகிறீர்களா?

*தேவன் உங்களை நேசிக்கிறார், நீங்கள் அவருக்குச் **விசேஷமானவர்கள்***. நாம் அவரோடு உறவாடவேண்டுமென்று அவர் நம்மை உருவாக்கினார். இதுவே அவருடைய மிகப் பெரிய ஆசையும், உங்கள் வாழ்க்கையைக் குறித்த அவரது நோக்கமு மாயிருக்கிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் தமது அரியா சனத்தில் சாய்ந்தவாறு "உனக்கு என் காலை வணக்கம், நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறுகிறார்.

என்னுடைய தோழி ஒருநாள் ஜெபித்துக்கொண்டிருக்கும் போது ஒரு தரிசனம் கண்டாள். அமெரிக்காவிலுள்ள மக்கள் தூக்கத்திலிருந்து எழும்புகிற காலைவேளையில் பிதாவானவர் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்வதாகக் கண்டாள். அவர்களோடு தொடர்புகொண்டு அவர்களோடு பேசுவதற்குத் தயாராக அவர் உள்ளே சென்றார். மேஜைக்கு அருகே இருந்த ஒரு நாற்காலியில் அவர் உட்கார்ந்தார். அந்த வீட்டிலுள்ள மக்கள் எழும்பி வந்தார்கள், போனார்கள், வருவதும் போவதுமாக இருந்தார்கள். அவர்கள் 'தேவனே கொஞ்சநேரம் கழித்துப் பேசலாம்,' 'சிறிது நேரம் அங்கேயே இருங்கள்,' 'நான் இந்த வேலையை முடித்த உடன் உங்களிடம் பேசுவேன்,' 'உங்களிடம் சிறிது நேரம் கழித்துத் தொடர்பு கொள்ளுகிறேன்,' 'தேவனே சிறிது நேரம் கழித்து வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

மாலை வந்தது, இரவும் வந்தது, தேவன் தலை குனிந்தவராக அந்த வீட்டைவிட்டுச் சென்றதைப் பார்த்ததாக அந்தப் பெண் உள்ளம் உடைந்தவளாகக் கூறினாள். அந்த நாளில் ஒருவர்கூட அவரிடம் வந்து பேசவில்லை.

அதிக சுறுசுறுப்பாக (அலுவலாக) இருக்காதீர்கள். ஜெபிக்கவும், தேவனோடு நேரத்தைச் செலவிடவும் உங்களுக்கு நேரமில்லை என்றால் நீங்கள் தேவைக்கதிகமான சுறுசுறுப்புடன் (அலுவலுடன்)

இருக் கிறீர்கள் என்று பொருள். தேவனை நீங்கள் எந்த அளவுக்கு நேசிக்கிறீர்கள் என்று அவரிடம் சொல்ல நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். எல்லாம் கடந்துபோனபின்பு, தேவனைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற மகிழ்ச்சி ஆரவாரத்தைத் தவிர வேறு எல்லாம் முடிந்துவிடும். அதுதான் உண்மை. அச்சமயத்தில் உங்களுக்குத் தேவனோடு நெருங்கிய உறவு இல்லை என்றால், அப்படிப்பட்ட ஒரு உறவைத் தொடங்குவதற்குக் காலதாமதமாகி விட்டது என்று பொருள். இதனால் நீங்கள் பரலோகம் செல்ல முடியாது என்ற நிலைவராவிட்டாலும் நீங்கள் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்கிற மகிழ்ச்சியை இழந்துபோனீர்கள்.

நீங்கள் ஒதுக்கிவைத்து *தேவன் உங்களை நேசிக்க* இடமளியுங்கள் என்று உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன். உங்கள் சொந்த பலத்தால் விசுவாசத்தில் செயல்படுவதை நிறுத்திவிட்டு, விசுவாசமும், வல்லமையும் உள்ள தேவனின் மகனாக அல்லது மகளாக இருங்கள். யாவற்றையும் விட்டுவிட்டு ஒருசிறு குழந்தையைப்போலச் செயல்படுங்கள். உங்கள் தேவனாகிய பிதாவின் மடியில் தவழ்ந்து ஏறி, அவர் உங்களை நேசிக்க இடம் கொடுங்கள். அவர் உங்களை நேசிக்க இடம் கொடுக்காதவரையில் அவரை நீங்கள் நேசிக்க முடியாது.

1 யோவா. 4:16 இல் "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து (புரிந்து, அடையாளம் கண்டு, கவனத்தாலும், அனுபவத்தாலும் உணர்ந்து) விசுவாசித்திருக்கிறோம் (பற்றிக்கொண்டு, நம்பிக்கை கொண்டுள்ளோம்)..." என்று கூறப்பட்டிருக்கிறது.

இன்று காலை எழுந்தவுடன் தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைப் பற்றிச் சிந்திக்கச் சிறிது நேரத்தைச் செலவிட்டீர்களா? சாதாரணமாகக் காலையில் எழுந்தவுடன் எதுவுமே செய்யத் தோன்றாது. ஆனால் நீங்கள் உங்கள் வாயைப் பயன்படுத்தி, உங்கள் உடலைச் செயல்படுமாறு தூண்டி, உங்கள் ஆவியாகிய

மனிதனைத் தட்டியெழுப்பி, பல அதிசயமான காரியங்களைச் செய்யவைக்க முடியும்.

எனவே நீங்கள் காலையில் எழுந்தவுடன் "பிதாவே, நீர் என்னை அதிகமாக நேசிப்பதற்காக உமக்கு நன்றி. நீர் இயேசுவை எனக்காக மரிக்கும்படி அனுப்பியதற்காக உமக்கு நன்றி. நான் பரிசுத்த ஆவியோடு இருப்பதற்காகப் பிதாவே, நான் உமக்கு நன்றி கூறுகிறேன். உயிர்த்தெழுதலின் வல்லமை எனக்குள் வாசம்பண்ணுவதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இன்று நான் போகும் இடங்களிலெல்லாம் நான் ஆசீர்வாதமாக இருக்கப்போவதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். தேவனே, நீர் என்னை நேசிக்கிறீர். இந்த என்னுடைய சிறிய வீட்டில் நீர் என்னை நேசிக்கிறீர். நான் உம்முடைய விசேஷத்த பிள்ளையாக இருக்கிறேன், நீர் என்னை நேசிக்கிறீர். நான் உம்முடைய கண்ணின் மணி, நீர் என்னை நேசிக்கிறீர்." என்று கூறத் தொடங்குங் கள். நீங்கள் உங்களுக்குள்ளாகவே பேசி, தேவனுடைய அன்பு உங்களைச் சூழ்ந்திருக்கிறது என்றும் நீங்கள் அந்த அன்பில் மூழ்கியிருக்கிறீர்கள் என்றும் *உணர்ந்துகொள்ளுங்கள்*. தேவன் உங்களைத் தம் உள்ளங்கையில் வரைந்திருக்கிறார் என்று ஏசா. 4:16-17 இல் வேதம் கூறுகிறது. "அதைப் பார்த்தீர்களா? அவள் அழகாயிருக்கிறாளல்லவா? நான் அவளை அதிகமாக நேசிக்கிறேன். என்னுடைய உள்ளங்கையில் இருக்கிற என்னுடைய சிறு பிள்ளைகளைப் பாருங்கள்" என்று அவர் மேலிருந்து கூறுவதை என்னால் பார்க்க முடிகிறது. அவர் உங்களை நேசிப்பதாலும், உங்களோடு உறவு வைத்துக்கொள்ள விரும்புவ தாலும் உங்களை நிரந்தரமான ஞாபகார்த்தமாக அங்கு வைத் திருக்கிறார்.

தேவனுக்கு முன்பாக நன்றியுணர்வுடன் இருப்பதோடு அவரோடு ஐக்கியம் கொள்ளுகிற உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சில வேளைகளில் நீங்கள் ஜெபத்தில்

முகங்குப்புற விழுந்து, நீங்கள் இரட்சிக்கப் பட்டதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும். யாவற்றை யும் விட்டுவிட்டுத் தேவனை நேசிக்கவேண்டும். 1 யோவா. 4:16,17 இல் அவர் "...தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத் தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது..." என்று கூறியிருப்பதைப் படியுங்கள்.

தேவன் உங்களை நேசிக்கிறார் என்று அறிவது, நீங்கள் தேவன்மேல் உறுதியான நம்பிக்கை கொள்ளவும் அவர் உண்மை யுள்ளவர் என்று நம்புவதற்கும் ஏதுவாகும்.

தேவன் உங்களை நேசிப்பதற்கு இடம் கொடுப்பதின் மூலம், ஆழ்ந்த விசுவாசம், பாவத்தின்மேல் வெற்றி, நோயிலிருந்து விடுதலை, செழிப்பு, மகிழ்ச்சி ஆகிய எல்லா ஆசீர்வாதங்களும் வந்து சேரும். தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதின் மூலமே இவைகள் வரவேண்டும். அநேக வேளைகளில் நாம் "நான்தான் தேவனை நேசிக்க வேண்டும்" என்று நேர்மாறாகச் சிந்திக்கிறோம். ஆனால் முதலாவது தேவன் நம்மை நேசிக்க இடம் கொடுக்கவேண்டும் என்று நான் நம்புகிறேன். தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுக்காதவரையில், நீங்கள் தேவன் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

நீங்கள் தேவனோடு உறவுகொள்ளவேண்டும் என்று நான் கூறலாம், ஏனென்றால் நீங்கள் நிச்சயமாகத் தேவனோடு உறவுகொள்ளவேண்டும். ஆனால் அதை எப்படிச் செய்வீர்கள்? தம்மோடு உறவுகொள்ளும்படி தேவன் என்னிடம் கூறியபோது, நான் என் படுக்கையில் அமர்ந்து "ஆண்டவரே இப்பொழுது என்ன

செய்யவேண்டும்?" என்றேன். அது சரிதான்! ஏனென்றால் அதுவரையில் தேவன் என்னை எவ்வளவு நேசிக்கிறார் என்று நான் அறியாமல் இருந்தபடியால் எப்படி தேவனுடன் உறவு கொள்வது என்பதை அறியாமல் இருந்தேன்.

ஒருவர் உங்களை நேசிக்கிறார் என்று உறுதியாகத் தெரியாத வரையில் நீங்கள் உங்கள் உணர்வுகளையும், நீங்கள் உண்மை யிலேயே அவர்களை நேசிப்பதையும், அவர்களிடம் பயபக்தியுடன் இருப்பதையும் எவ்வாறு வெளிப்படுத்துவீர்கள்? நீங்கள் உங்களையே முட்டாளாக்கிக் கொள்வீர்களோ என்ற பயம் உங்களுக்கு இருக்கும். உங்களை நேசித்து ஏற்றுக்கொள்வார் கள் என்று நீங்கள் கருதுபவர்களிடம் சுமுகமான நிலையில் இருப்பீர்கள். நான் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியாத, செய்ய முடியாத காரியங்களைக்கூட என் கணவரோடு பகிர்ந்துகொள்ள, செய்ய என்னால் முடியும். ஏனென்றால் அவர் என்னை நேசிக்கிறார் என்பதை நான் அறிவேன். தேவனோடு உள்ள உறவும் அதே மாதிரிதான்.

எனவே உங்கள் வழக்கங்களை விட்டு வெளியே வந்து புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள். தேவனுக்கு வாய்ப்பு கொடுங் கள், அவருடன் ஐக்கியம் கொள்வது எப்படி என்பதை அவர் உங்களுக்குப் போதிப்பார். கீழ்க்கண்ட கேள்வியை இப்பொழுதே உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள்.

'நான் தேவனுடன் சுமுகமான நிலையில் (சரியான உறவுடன்) இருக்கிறேனா?'

# 4

# அன்பு, நம்பிக்கை, விசுவாசம்

*"கிறிஸ்து இயேசுவினிடத்தில் (நாம் இருந்தால்) விருத்த சேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற (வெளிப்படுத்தப்படுகிற, ஊக்கப்படுத்தப்படுகிற) விசுவாசமே உதவும்."*

— கலா. 5:6

நம்மில் அநேகர் விசுவாசத்தைப் பெறுவதற்காக அதிக நேரத்தைச் செலவிடுகிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது முடியாத காரியம் (எபி. 11:6) என்பது நமக்குத் தெரியும். எனவே அதிக விசுவாசத்தைப் பெற, பாடுபட்டு முயற்சி செய்கிறோம். ஆனால் விசுவாசம் என்பது இருதயத்திற்குரியது. தேவனோடு அன்பான ஐக்கியம் கொள்வதின்மூலம்தான் அதைப்பெறமுடியும். என்னால் உங்களுக்கு விசுவாசத்தைப் போதிக்கமுடியாது, ஆனால் விசுவாசத்தைப் பற்றிய அடிப்படை உண்மைகளை உங்களுக்குப் போதித்து, எதைச் செய்தாகிலும் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற தாகத்தை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்த முடியும். தேவனிடமிருந்து வருகிற வெளிப்பாட்டின் மூலமே அது கிடைக்கும்.

விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டு தேவனைப் பிரியப்படுத்த கடினமாக முயற்சி செய்வதை நிறுத்திவிட்டு, உங்கள் முழு நேரத்தையும் முயற்சிகளையும் தேவனுக்காகவும், தேவனை நேசிப்பதற்காகவும் செலவிடத் தொடங்குங்கள். அவரை நேசிப்பதிலும் அவர் உங்களை நேசிக்க இடமளிப்பதிலும் உங்கள் நாட்கள் முழுவதையும் செலவிடுங்கள்.

“நாம் (தேவனுடனுள்ள மனிதனின் உறவையும் தெய்வீக காரியங்களையும் மதிக்கவேண்டும் என்ற மனஉறுதியினால் நம்பிக்கையோடும் தூய உற்சாகத் தோடும் நமது வாழ்க்கையை வழிவகுப்பதின் மூலம்) தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்” (2 கொரி. 5:6)

ஒருமுறை இந்த வேதப்பகுதியை நான் படித்துக் கொண்டிருந்தபோது, தேவன் ஆற்றல் வாய்ந்த சில காரியங் களைக் குறித்து என் உள்ளத்தில் பேசத் தொடங்கினார். நான் விசுவாசித்து நடக்க முயற்சிக்கின்றேன். என் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் நான் விசுவாசித்து நடக்க விரும்பு கிறேன். 2 கொரி. 5:6 சொல்லுகிறதாவது, தேவனுடனுள்ள மனிதனின் உறவையும், தெய்வீக காரியங்களையும் மதிக்க வேண்டும் என்ற மனஉறுதியினால் நம்பிக்கையோடும், தூய உற்சாகத்தோடும் நமது வாழ்க்கையை வழிவகுக்கிறோம்.

வேறுவகையில் கூறுவதானால், *தேவனோடு நான் கொண்டுள்ள உறவைப்பற்றி எதை நம்புகிறேனோ அதன் அடிப்படையில் மட்டுமே என்னால் விசுவாசத்தில் நடக்கமுடியும்.* இதைப் புரிந்து கொண்டீர்களா? தான் நேர்மையற்றவன் என்று ஒருவன் எண்ணினால் அவன் விசுவாசத்தில் நடக்கவும் மறந்து விடுவான். ஒருவன் தான் மண்ணிலுள்ள புழுவுக்குச் சமம் என்றும், தேவன் தன்னை

நேசிக்கவில்லை என்றும் எண்ணு வானானால் அவனும் விசுவாசத்தில் நடக்க மறந்துவிடுவான். ஏராளமான மக்கள் விசுவாசத்தில் நடக்க முயற்சிக்கிறார்கள், ஆனால் இக்காரியங்களை அவர்கள் மனதில் கொள்வ தில்லை.

விசுவாசம் அன்பினால் கிரியை செய்கிறது என்று கலா.5:6 சொல்லுகிறது. இதன் விளக்கத்தைத் தேவன் என் மனதில் கொடுத்தார். அதாவது, தாங்கள் மற்ற மக்களை நேசிக்கா விட்டால் அவர்களுடைய விசுவாசம் கிரியை செய்யாது என்று இந்த வேதப்பகுதி கூறுவதாக மக்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இந்த வேதப்பகுதியின் பொருள் அதுவல்ல. நான் அவர்களை எவ்வளவாய் நேசிக்கிறேன் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாவிட்டால் அவர்களது விசுவாசம் கிரியை செய்யாது என்பதே அதன் பொருள். அன்பு இல்லாமல் விசுவாசம் கிரியை செய்யாது. ஆனால் மற்றவர்களை நேசிப்பது உங்கள் சொந்தத் திறமையால் அல்ல, எல்லாம் வல்ல தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதன் மூலம் மட்டுமே.

அதில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. தேவனை நம்பி விசுவாசத்தில் நடப்பது என்பது, அவரைச் சார்ந்திருந்து எல்லாவற்றிக்காகவும் அவரை நம்புவது ஆகும். ஒருவர் உங்களை நேசிக்கிறாரா, இல்லையா என்பது உங்களுக்குத் தெரியாதவரையில் நீங்கள் அவர்களோடு இவ்விதம் நடந்து கொள்ளமுடியாது. நீங்கள் அதை மறந்துவிடலாம். தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் அறியாவிட்டால் உங்களால் ஒருபோதும் அவரை நம்பமுடியாது.

தேவன் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை நீங்கள் உண்மையிலேயே அறிந்திருந்தால், நோயிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்வதில் உங்களுக்குச் சிரமமிருக்காது. உங்களது பொருளாதாரத் தேவைகளைச் சந்திப்பதிலும் தொல்லை இருக்காது.

தேவன் உங்களுக்குக் கொடுக்கிறார் என்று நீங்கள் முழுமையாக நம்பாததால்தான் உங்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நீங்கள் ஒருவேளை “நான் அதை நம்பவேண்டும் என்றுதான் எண்ணுகிறேன், ஆனால் எவ்வாறு நம்புவது?” என்று கூறலாம்.

தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அவர் அன்பைக் காட்டும்போது அதை உணரத் தொடங்கவேண்டும் என்பதே. 1 யோவா. 4:19 இல் “அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்.” என்று வேதம் கூறுகிறது. அவர் உங்களை முதலாவது நேசித்தார் என்ற உண்மையை நீங்கள் நிச்சயமாக நம்பாவிட்டால் உங்களால் தேவனை நேசிக்க முடியாது.

எல்லாமே உங்கள் உள்ளத்தின் ஆழத்தில்தான் இருக்கிறது. ஆம், அது உள்ளே இருக்கிறது! *தேவன் உங்களை நேசிக்கிறார்! நீங்கள் அற்புதமானவர்கள்! நீங்கள் அழகானவர்கள்! நீங்கள் விலையேறப்பெற்றவர்கள்! நீங்கள் வியக்கத்தக்கவர்கள்! தேவன் உங்களை நேசிக்கிறார்!* தேவன் உங்களை நேசிப்பது போல இந்த உலகில் உள்ள யாரும் உங்களை நேசிக்க முடியாது.

உங்களுக்குத் தேவனைத்தவிர வேறு யாரும் தேவையில்லை, ஆனால் அவரே உங்கள் வாழ்க்கையில் மற்ற மனிதர்களையும் தருகிறார். உண்மை என்னவென்றால், நீங்களும் தேவனும் தவிர வேறுயாரும் இல்லாவிட்டாலும் நீங்கள் நன்றாக இருப்பீர்கள். தேவன் உங்களுடைய உற்ற நண்பராயிருப்பார். உங்களுக்கு ஒரு துணை இல்லாவிட்டால் அவர் உங்களுக்குத் துணையாயிருப்பார். உங்களுக்குத் தாயோ அல்லது தந்தையோ இல்லையென்றால் அவர் உங்களுக்குத் தாயாக அல்லது தந்தையாக இருப்பார்.

இந்த அளவுக்குத் தேவன் உங்களை நேசிக்கிறார். ஆதலால்தான் நீங்கள் எல்லாவற்றிற்கும் அவரை நம்பலாம். உங்கள் தேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும் அளவிற்கு அவர் உங்களை நேசிக்கிறார். உங்கள் தேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை நீங்கள் அறியும்வரையில் உங்களால் அதைப் பெற்றுக் கொள்வதற்காக விசுவாசத்தோடு செயல்பட முடியாது.

*தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுக்கும்போதுதான் விசுவாசம் செயல்படும்.* உங்கள் சொந்தத் திறமையால் ஒருவரை நேசிக்கலாம் என்று முயற்சித்தால் அது *பலனளிக்காது*. தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதோடு "தேவனே, நீர் என்னை நேசிக்கிறீர் என்பதை நான் அறிவேன். அல்லேலூயா! பிதாவே, நான் உம்மைப் போற்றுகிறேன், உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறேன்" என்று நாள்முழுவதும் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும்.

ஸ்மித் விகிள்ஸ்வொர்த் என்பவர் தேவனுடைய மிகப்பெரிய ஊழியர் ஆவார். நீங்கள் அதிக நேரம் ஜெபத்தில் செலவிடுவீர்களா என்று ஒருவர் அவரிடம் கேட்டபோது, அவர் "நான் 30 நிமிடங்களுக்குமேல் ஜெபித்ததில்லை, ஆனால் பொதுவாக ஜெபிக்காமல் நான் 30 நிமிடங்களுக்குமேல் இருந்ததில்லை" என்று கூறினார். ஒரு தடவை அவர், தான் தொடர்ந்து 15 நிமிடங்களுக்குமேல் தேவனோடு தொடர்பு கொள்ளாமல் இருந்தால், அதற்காக வருத்தப்படவேண்டிய திருக்கும் என்று கூறினார்.

நாம் தவறான முறையில் காரியங்களைச் சாதிக்க முயற்சிக்கிறோம். உங்கள் கடினமுயற்சிகளால் நீங்கள் அதைச்

செயல்படுத்த முடியாது. தேவன் உங்களை நேசிப்பதால் அவர் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களுக்கு இரட்சிப்பைக் கொடுத்தது போல, மற்றவற்றையும் உங்களுக்குக் கொடுப்பார்.

நீங்கள் செயல்படுவதினால் மட்டும் உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரையோ அல்லது வேறு ஒருவரையோ இரட்சிப்படையச் செய்ய முடியாது. தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுங்கள். அதன்பிறகு உங்கள் குடும்பத்தில் உள்ளவரை நீங்கள் பார்க்கும்பொழுது, உங்களால் அவரை நேசிக்க முடியும். உங்கள் வார்த்தைகளாலும், உங்கள் மனம்போன வழியிலும் அவர்களை இணங்கச் செய்வதைத் தவிர்த்து, அவர்களை நேசித்தீர்களானால் அவர்களை இயேசுவிடம் வழிநடத்த முடியும் என்று வேதம் கூறுகிறது. தேவ ஆவியானவர் தம்முடைய அன்பால் உங்கள் குடும்பத்தைத் தம்மிடமாக இழுத்துக் கொள்ளுவார். முதலாவது தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுக்காவிட்டால் நீங்கள் மற்றவர்களை நேசிக்க முடியாது.

எபே. 2:8 இல் “கிருபையினாலே (தகுதியற்றவர்களின்மீது தேவன் கொள்ளும் பரிவினாலே) விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்...” என்று வேதம் கூறுகிறது. இரட்சிக்கப் படுவதற்கு நீங்கள் எதையும் செய்யவில்லை என்பதை உணர்ந்து கொண்டீர்களா? இயேசு நம்மை இரட்சிப்பதற்குமுன் நாம் கெட்டுப்போன பாவிகளாக இருந்தோம். நம்முடைய நற்செயல் களினாலோ அல்லது எதையும் செம்மையாகச் செய்ய முடியும் என்ற திறமையினாலோ நாம் இரட்சிப்பைப் பெறவில்லை. ஆனால் அது கிடைத்ததற்கு ஒரே காரணம், “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் (நம்மீது) அன்புகூர்ந்தார்” (யோவா. 3:16) என்பது ஆகும்.

உங்கள் வாழ்வின் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பதற் காகத் தேவன் தம்முடைய ஆற்றலை மனமுவந்து பயன்படுத்து வதையே கிருபை என்று கூறலாம். தேவன் தமது கிருபையினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவதற்குப் போதுமான விசுவாசத்தைக் கொடுத்ததுபோலவே, தம்முடைய அன்பினாலே அவர் உங்களுக்குச் சுகமளிப்பவர் என்று நம்புவதற்குரிய விசுவாசத் தையும் உங்களுக்குக் கொடுக்கிறார். அவரே உங்கள் தேவை களைச் சந்திப்பவர் என்று நம்புவதற்குரிய விசுவாசத்தையும் உங்களுக்குக் கொடுக்கிறவர்.

உங்களுடைய இரட்சிப்புக்காக அவர் உங்களுக்கு அளித்த விசுவாசமானது உங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் உங்களை விடுவிக்கப் போதுமானதாக இருந்தால், உங்கள் உள்ளத்தில் உள்ள அதே விசுவாசம் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுடைய எல்லாத் தேவைகளையும் சந்திக்கப் போதுமானது. தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை நம்பி, உண்மை யிலேயே அதைக்குறித்து அறிந்துகொள்ளத் தொடங்கினால், நீங்கள் அவரை நம்பத் தொடங்குவீர்கள். தேவனுடைய வார்த்தை சத்தியம் என்ற உணர்வு உங்களுக்குள் உண்டாகும். அவர் உங்களை நேசிக்கிறபடியால் அவர் உங்களிடம் ஒருபோதும் பொய் பேசமாட்டார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

விசுவாசம் என்றால் "தேவனுடைய வல்லமையிலும், ஞானத் திலும் நன்மை செய்யும் பண்பிலும், அசைக்க முடியாத நம்பிக்கையும், உறுதியும் கொண்டு முழுவதுமாக அவர்மீது சார்ந்து கொள்வது" என்பதாகும் என்று விரிவாக்க வேதாகமம் கொலோ. 1:4 இல் விளக்கமளிக்கிறது.

உங்களை நேசிக்கும்படி தேவனுக்கு இடமளிக்கும்போது, அவரை நேசிக்கவும், நம்பவும் கற்றுக்கொள்வீர்கள். அதன்மூலம் விசுவாசம் கொள்வீர்கள்.

# 5

# பயத்திலிருந்து விடுதலை

*“அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பேதள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படு கிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.”*

— 1 யோவான். 4:18

தேவன் நம்மை நேசிக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கை யோடு நாம் விசுவாசத்தில் தரித்திருப்பது வழக்கம். திடீரென ஏதோ ஒன்று நம்மைத் தாக்குகிறது.

நம் வாழ்வில் நடைபெறுகின்ற தீயகாரியங்களால் ஏற்படுகிற சூழ்நிலைகளே நம் விசுவாசத்தைத் திருடும் பெரிய திருடர்கள். தேவன் உங்களை நேசிக்கவில்லை என்று தோன்றும் நிலையைச் சூழ்நிலைகள் உருவாக்கும்வரை, அவர் உங்களை நேசிக்கிறார் என்று நம்புவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

அடுத்து, பிசாசானவன், உங்களை விடுதலையாக்கும் தேவனுடைய அன்பிலிருந்து உங்களைப் பிரிப்பதற்காக, பயத்தின் ஆவியையும் கண்டனத்தின் ஆவியையும் கொண்டு வருகிறான். “இது என்ன?

தேவன் உன்னை நேசிக்கிறார் என்று நான் நினைத்தேன். அப்படியானால் இந்தக் கெட்ட காரியங்கள் ஏன் உனக்கு நிகழ்கின்றன? ஒருவேளை நீ மிகவும் கெட்ட காரியம் எதையோ செய்திருப்பாய். தேவன் உண்மையாகவே உன்மீது மிகவும் கோபமாக இருக்கிறார்." என்று சொல்லுவான்.

அப்பொழுது நீங்கள் தேவன் மேலுள்ள திடநம்பிக்கையை இழந்து விடுவீர்கள். நம்பிக்கை இல்லாமல் இருந்தால் தேவனால் உங்களுக்கு உதவமுடியாது. தேவன் உங்களை நேசிக்கிறார் என்று நீங்கள் அறியாவிட்டால், நீங்கள் முழுமையான நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் இருக்க முடியாது. பிசாசினால் கொண்டுவரப்படும் பயம், ஆக்கினைத் தீர்ப்பு ஆகிய சுமையை நீங்கள் ஏற்றுக்கொண்டால் தேவன் உங்களை எந்த அளவு நேசிக்கிறார் என்பதை உங்களால் அறிய முடியாது.

1 யோவான். 4:18 மிகப் பெரிய சக்திவாய்ந்த ஓர் உண்மையைக் கூறுகிறது. "...பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்..." இதில் கூறப்பட்டுள்ளது என்ன என்பதை அறிவதற்காக நான் மீண்டும், மீண்டும் இந்த வேதப்பகுதியைத் தியானித்தேன். கடைசியில் ஒருநாள் தேவன் எனக்கு அதை வெளிப்படுத்தினார். பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும், தேவனே அந்தப் பூரண அன்பு. அந்த அன்பு உங்களிடம் எவ்வளவு பூரணமாயிருக் கிறது என்பதை நீங்கள் உணர்ந்துகொண்டால், இந்த உலகத்தில் உள்ள படைப்புகளில் எந்த ஒன்றைக் குறித்தாயினும் நீங்கள் பயப்படத்தேவையில்லை. தேவன் உங்களை நேசிக்கிறார் என்ற தனிப்பட்ட வெளிப்பாடு உங்களுக்கு இருந்தால் நீங்கள் பயப்பட முடியாது.

தேவன் உங்களை நேசிக்கிறார் என்று நீங்கள் அறிந்திருந் தால் தோல்வியடைவோம் என்ற பயம் உங்களுக்கு ஏற்படாது. நீங்கள்

தேவனைச் சார்ந்திருந்தால் நீங்கள் தோல்வியடைய முடியாது. நீங்கள் உங்களையே சார்ந்திருந்தால் மட்டுமே நீங்கள் தோல்வியடைவீர்கள். தேவன் உங்களை நேசிக்கிறார் என்று அறிந்திருந்தால் தோல்வியைக் கண்டு அஞ்சமாட்டீர்கள். தேவன் உங்களை நேசிக்கிறார் என்று அறிந்திருந்தால் புறக்கணிக்கப்படுதலைக் கண்டும் அஞ்சமாட்டீர்கள்.

எல்லாவற்றையும் உள்ளடக்கும் அளவிற்கு தேவனுடைய அன்பு மிகப் பெரியது. உங்களை இரட்சித்து, விடுதலையாக்கிய அதே தேவன் உங்களைக் குற்றஞ்சாட்டுவார் என்று நினைக் கிறீர்களா? குற்றஞ்சாட்டுகிறவன் சாத்தான்தான். தேவன் உங்கள் வாழ்க்கையில் பாவத்தை உணர்த்தி, அதிலிருந்து வெளியேற வழியையும் காட்டுவார். சாத்தான் உங்களைக் குற்றஞ்சாட்டி பாவத்திலிருந்து விடுபட வழியே இல்லை என்பான்.

வேதம் இவ்வாறு கூறுகிறது: “அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல” (1 யோவான். 4:18).

நீங்கள் என்னை முழுமையாக நேசித்தால் நீங்கள் என்னைக் கண்டு பயப்படமாட்டீர்கள், அல்லது நீங்கள் யாரையாவது முழுமையாக நேசித்தால் பயம் உங்கள் வாழ்வை விட்டு நீங்கிவிடும் என்று இந்த வேதப்பகுதி குறிப்பிடுவதாக அநேக மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் இப்பகுதியின் பொருள் இதுவல்ல.

உங்களை நேசிக்க தேவனுக்கு இடம் கொடுத்தால் நீங்கள் பயப்பட மாட்டீர்கள் என்பதே அதன் பொருள். நீங்கள் பயமின்றி வாழ விரும்பினால் தேவன் உங்களை நேசிக்க நீங்கள் இடம் கொடுக்கவேண்டும். *விசுவாசத்தில் செயலாற்றுவதின்மூலம் இப்பொழுதே உங்களுக்கான தேவ அன்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

தொடர்ந்து செல்லுங்கள். விசுவாசத்தில் செயல் பட்டு, தேவனின் அன்பை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவருடைய அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் என்பதைத் தேவன் எனக்கு வெளிப்படுத்தியபின், நான் அதைச் செயல் படுத்த வேண்டியிருந்தது. எங்கள் காரில் அடிக்கடி சிறுசிறு கோளாறுகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. காரின் இயந்திரத்தின் ஆற்றல் இணைப்புக்கருவி பழுதுபட்டுவிட்டதென்று நாங்கள் எண்ணினோம். அந்தக் கருவி பெரியதாக இருந்ததால் அது முழுவதும் பழுதடைந்துவிட்டால் அதை மாற்றுவதற்கு ஏறக் குறைய நானூறு அல்லது ஐந்நூறு டாலர்கள் செலவாகும். எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை. எனவே தொடர்ந்து அதை ஓட்டிக்கொண்டிருந்தோம்.

அன்று காலையில் தேவன் என்னிடம் இடை பட்டு "ஜாய்ஸ், நீ என்னை நாள்முழுவதும் தொடர்ந்து நேசித்துக்கொண்டிரு. நான் உன்னை நேசிக்க இடம் கொடு. நீ வேறு ஒன்றும் செய்யவேண்டாம். நீ பெரிய விசுவாசமுள்ள பெண்ணாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. நீ செய்யவேண்டிய தெல்லாம் தொடர்ந்து என்னை நேசிப்பதும் நான் உன்னை நேசிக்க இடம் கொடுப்பதும்தான். எப்பொழுதும் நான் உன்னை நேசிக்க இடம் கொடு" என்றார்.

எனவே, நான் எனது மிகவும் பரிசுத்தமான விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, பாடிக்கொண்டும் தேவனைப்பற்றிய பாடல்களை இயற்றிக்கொண்டும் மிகவும் மகிழ்ச்சியாக நேரத்தைக் கழித்தேன். அப்பொழுது திடீரென கார் நிறுத்தும் இடத்தில் என் கணவர் திரும்பி வந்துவிட்ட ஒலி கேட்டது. 45 நிமிடங்களுக்குமுன்தான் அவர் வேலைக்குச் சென்றிருந்தார். அவர் கதவைத் திறந்து "காரை முதல் கியருக்குமேல் திருப்ப முடியவில்லை, அதை உள்ளே கொண்டு நிறுத்த வேண்டியது தான்" என்றார்.

நான் கதவை மூடிவிட்டுச் சிரிக்க ஆரம்பித்தேன். சிரிக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை, அது தானாக வந்தது. அது என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வந்தது. காலை முழுவதும் அவர் என்னை நேசிக்க நான் இடம் கொடுத்ததால், என்னால் இப்பொழுது சிரிக்க முடிகிறது என்பதைத் தேவன் எனக்குக் காண்பித்தார். தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதால் உங்களிலிருந்து விசுவாசம் வெளிப்பட நீங்கள் வழிவகுக்கிறீர்கள். நான் உடனே சிரிக்க ஆரம்பித்தேன், அதுதான் விசுவாசம்.

ஆபிரகாம் விசுவாசச் சிரிப்பு சிரித்தார். தேவன் அவரிடம் வந்து அவருக்கு ஒரு மகன் பிறக்கப்போகிறான் என்று கூறியபோது ஆபிரகாம் “மகிமையுண்டாவதாக! நான் இதை நம்புகிறேன்” என்று கூறிச் சிரித்தார். சாராளோ சந்தேகத்தாலும், அவநம்பிக்கையாலும் சிரித்தாள். தேவன் அவளைத் திருத்தினார். ஆனால் ஆபிரகாம் நகைத்ததைக் கண்டித்து ஒன்றும் சொல்லவில்லை, ஏனென்றால் ஆபிரகாம் விசுவாசத்தோடு சிரித்தார்.

பிசாசு உங்களுக்கு எதிராக வந்து செய்ய முயற்சிப்பது முட்டாள்தனமாகவும், கேலிக்குரியதாகவும் தோன்றும்போது, நீங்கள் உங்கள் தேவனை நன்கு அறிந்திருக்கிறபடியால் அது உங்களைப் பயமுறுத்தாது என்பதை உணர்ந்து, விசுவாசத்தோடு சிரியுங்கள். தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதால் அதை ஒன்றுமில்லாதபடி செய்துவிடுவார்.

ஆகவே என் காரின் பழுதுபட்ட இயந்திரத்தைக் குறித்து நான் சிரித்துக்கொண்டிருந்தேன், தேவன் அமர்ந்த மெல்லிய குரலில் என்னுடைய உள்ளத்தில் பேசினார். ஆனால் அது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. “ஜாய்ஸ், நீ என்னோடு இவ்விதம் செயல்பட்டுக் கொண்டிருந்தால், நான் ஒருபோதும் உன்னை ஏமாற்றமடைய விடமாட்டேன்” என்று மூன்றுமுறை அவர் என்னிடம்

கூறினார். அது சரியான நேரத்தில் என் வீட்டின் சூழ்நிலையிலிருந்தே வந்ததுபோல் தோன்றியது. “நான் ஒருபோதும் உன்னை ஏமாற்றமடைய விடமாட்டேன், நான் ஒருபோதும் உன்னை ஏமாற்றமடைய விடமாட்டேன்.”

நீங்கள் தேவனைச் சார்ந்துகொண்டு, அவர் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதோடு, நீங்களும் அவரை நேசித்தால், விசுவாசத்தில் செயல்பட முயற்சி செய்வதை நீங்கள் மறந்து விடலாம். தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுத்து, நீங்களும் அவரை நேசித்தால் அவரே எல்லாவற்றையும் நிறைவேற்றுவார். தேவ அன்பு உங்களில் கிரியை செய்து, எல்லா பயத்தையும் புறம்பே தள்ளிவிடும்.

# 6

# உள்ளங்களைத் தொடும் அன்பு

*“தேவனிடத்தில்அன்பு கூருகிறவன் தன் சகோதரரிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.”*

— 1 யோவான். 4:21

நீங்கள் தேவனுடைய விசேஷித்தப் பிள்ளைகள். உபா. 7:6 இல் அவர் இதைக் கூறியுள்ளார். நீங்கள் அவ்விதம் நடந்துகொள்ள ஆரம்பித்தால் அது இந்த உலகையே மாற்றத் தொடங்கிவிடும். நீங்கள் முகத்தில் புன்சிரிப்போடு பல்பொருள் அங்காடிக்குச் சென்று ஒரு பொருள் வைக்கும் தள்ளுவண்டியை எடுத்துக் கொண்டு “நான் தொடுகிற எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக் கும். அல்லேலூயா! நான் இந்தக் கடைக்கு வந்திருப்பது இங்குள்ளவர்களுக்கு ஆசீர்வாதமாகும், மகிமை உண்டாவ தாக!” என்று கூறிக்கொண்டும், பாடிக்கொண்டும் தனிப்பட்ட வர்களாகக் கடையைச் சுற்றிவருவீர்கள்.

நாம் எவ்வளவு விசேஷமானவர்கள் என்பதை உணரத் தொடங்கினால், தேவன் நம்மை நேசிக்கிறார் என்ற உறுதியோடு

செயல்பட்டால் நாம் இந்த உலகத்தையே இயேசுவுக்காக வென்றுவிடலாம். அன்பானது காட்டுத்தீயைப்போல் பரவக் கூடியது. நான் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொண்டு எல்லோரிடமும் கோபத்தைக் காட்டினால், அது எந்த விதத்திலும் நன்மை பயக்காது. "நான் ஒரு கிறிஸ்தவன் – நான் ஒரு கிறிஸ்தவன்" என்று சொல்லுகிற நீங்கள் உங்களுக்குக் குறுக்கே ஒரு கார் வந்துவிட்டால் "என்னுடைய வழியைவிட்டு விலகு முட்டாளே, நான் கோவிலுக்குப் போகிறேன் என்பது தெரியவில்லையா? நான் கூட்டத்திற்குச் செல்ல கால தாமதமாகிவிடும்" என்று சொல்கிறீர்கள்.

சிலவேளைகளில் இவ்வித தரக்குறைவான காரியத்தைச் செய்கிறோம். நீங்கள் வெற்றியை இறுகப்பிடித்துக்கொள்ள ஆயத்தமா? அந்தச் சூழ்நிலைக்குள் ஆவிக்குரிய பிரகாரமாகச் சென்று வெற்றியை இறுகப்பிடித்துக்கொண்டு "பிசாசே, நீ பயத்தாலும், பொய்களாலும் வெகுகாலம் என்னை நடத்தினாய். இப்பொழுது நான் விசேஷமானவன். தேவன் என்னை நேசிப்பதால் இயேசுவின் நாமத்தில் நான் வெற்றியடையப் போகிறேன். பிசாசே, உன்னால் எதுவும் செய்ய முடியாது!" என்று கூறுங்கள்.

உங்களுக்குள் இருக்கிற தெய்வீக அன்பு பயத்திலிருந்து உங்களை விடுதலையாக்கும். அன்போடு மற்றவர்களைச் சந்திக்க நீங்கள் அஞ்சமாட்டீர்கள். இயேசு தம்முடைய பிதாவினிடம் சென்றுவிட்டபடியால், உங்களைக்கொண்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்யப்போவதாகக் கூறுவதை நீங்கள் நம்பவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் உங்களைப் பயன்படுத்துவாரென்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் எதைப் பெறவேண்டுமென்று அவரை நம்புகிறீர்களோ அதை அவர் உங்களுக்குத் தருவார். நீங்கள் செயல்பட அஞ்சமாட்டீர்கள்.

நான் எத்தனைமுறை விசுவாசத்தின் விளிம்பில் நின்று பயமுறுத்தும் செயலைச் செய்யவேண்டிய கட்டத்தில் நின்றிருக் கிறேன் என்று சொல்லுவது முடியாத காரியம். அவ்வேளைகளில் தேவன் “வா, ஜாய்ஸ், வா. நான் உன்னைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்வேன் வா” என்று கூறுவார். நான் உடனே தைரியமாக அச்செயலைச் செய்ய முனைவேன். ஒருமுறைகூட தேவன் என்னைக் கைவிட்டதில்லை.

எதையாவது செய்யத் தொடங்கும்போது, அது தோல்வியில் முடிந்துவிடுமோ என்று நான் ஏன் கலங்க வேண்டியதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் தேவன் என்னை நேசிக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அவர் என்னை நேசிக்கிறார். நான் அவரை நேசிக்கிறேன் என்பதை அவர் அறிவார். அவருடைய கிருபையால் என் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்துள்ளேன். நீங்கள் இவ்வாறு செய்திருந் தால், நீங்கள் தேவனை நேசித்தால், அவரும் உங்களை நேசிப்பதால், இந்த உலகத்தில் உங்களால் மேற்கொள்ள முடியாத எந்தப் பிரச்சினையும் இருக்க முடியாது.

“உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களா யிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களா னாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும்,

தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டி யானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு விலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்." (ரோமர். 8:35-39)

நீங்கள் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்று தேவன் எந்த அளவுக்கு விரும்புகிறார் என்பது குறித்து உங்களுக்கு எந்த எண்ணமும் இல்லாமல் இருக்கலாம். நீங்கள் துக்கமடைந்தால் தேவன் வேதனைப்படுகிறார். சிலவேளைகளில் நீங்கள் கண்விழித்து எழுந்ததிலிருந்து நாள்முழுவதும் மன உளைச்ச லோடு இருப்பீர்கள். நான் எப்படிப்பட்ட நாளைக் குறித்துப் பேசுகிறேன் என்று தெரிகிறதா? நீங்கள் பூனையை உதைக் கிறீர்கள், பிள்ளைகளிடம் கத்துகிறீர்கள், அயல்வீட்டாரை வெறுக்கிறீர்கள், அதிருப்தியுடன் சிடுசிடுத்த முகத்தோடு "எப்பொழுது பார்த்தாலும் வேலை, வேலை செய்து கொண்டிருந் தாலும் யாருமே பாராட்டுவதில்லை" என்பீர்கள்.

நீங்கள் எவ்விதம் செயல்படுவீர்கள் என்பதை நான் அறிவேன், ஏனென்றால் நானும் அதைச் செய்திருக்கிறேன். பிள்ளைகள் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வரும்போது *"நீங்கள் ஏழுமணி நேரத்துக்குப் பதில், பதினான்கு மணிநேரம் ஏன் பள்ளியில் இருக்கக்கூடாது?"* என்று எண்ணுவீர்கள்.

அது தேவனை வேதனைப்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களை வருத்தப்படுத்தவேண்டும் என்று நான் முயற்சிக்கவில்லை. தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் நம்பி, அந்த அன்புக்குப் பதிலாக நீங்களும் அன்பு செலுத்தத் தொடங்கினால், அந்த அன்பு உங்களை நிரப்பி, மற்ற எல்லோர் மேலும் தங்கு தடையின்றி பாயத் தொடங்கும் என்பதை உங்களுக்கு உணர்த்த முயற்சிக்கிறேன். நீங்கள் அன்பாலும், கனிவாலும் நிரம்பியவர்களாக, இனிமையானவர்களாக இருப்பீர்கள்.

தேவன் உங்களை நேசிக்கிறார் என்ற உண்மையை நீங்கள் இறுகப் பிடித்துக்கொண்டால் உங்களுக்குச் சுகம் கிடைக்கும், செல்வச் செழிப்பு உண்டாகும், உங்கள் தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும். ஏன்? *நீங்கள் நிம்மதியாக இளைப்பாறத் தொடங்குவீர்கள்.*

தேவன் நமக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிற பல நன்மையான காரியங்களை நமக்குக் கொடுக்க முடியாமல் போவதற்குக் காரணம் என்னவென்றால், நாம் அதை அடையவேண்டுமென்று நாமாக முயற்சித்துக்கொண்டே இருப்பதால், அவர் அந்த நன்மைகளை நமக்குத் தருவதற்குப் போதுமான அவகாசத்தை நாம் அவருக்குத் தருவதில்லை. நீங்கள் தேவனில் இளைப்பாறி, அவரை நேசிக்கவேண்டும் என்று மட்டும்தான் அவர் விரும்புகிறார். அவர் உங்களை நேசிக்க நீங்கள் இடம் கொடுத்து அதைப் பெற்றுக்கொண்டால் மட்டும் போதும் என்று அவர் விரும்புகிறார்.

நீங்கள் அன்பு செலுத்துபவர்களாக இருக்கும்போது கொடுப்பவர்களாக மாறிவிடுவீர்கள். அன்பு செலுத்துபவர் களால் கொடுக்காமல் இருக்க முடியாது. எனவே பிசாசானவன் உங்களைக் கட்டுப்படுத்த முடியாது.

உபா. 7:6 வசனத்தின் கடைசிப்பகுதி "...உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார்" என்று கூறுகிறது. தேவன் உங்களை அழைத்திருக் கிறார். இப்பொழுது உங்கள் முதன்மையான வேலை உங்கள் வீட்டில் உங்கள் குடும்பத்துடன் இருப்பதாக இருக்கலாம், ஆனால் தேவன் உங்களை அழைத்திருக்கிறார். தேவன் உங்களைப் பயன்படுத்தவேண்டும் என்று நீங்கள் முழுமனதுடன் வாஞ்சித்தால் அவர் உங்களைப் பயன்படுத்துவார். ஆனால், முதலாவது அதற்கான அஸ்திபாரத்தை

நீங்கள்தான் போட வேண்டும். *தேவன் உங்களை நேசிக்கிறார் என்று நீங்கள் அறிந்திருக்கவேண்டும்.*

உங்கள் ஆவிக்குரிய ஆற்றலையெல்லாம் உங்கள்மீது முழுக்கவனத்தையும் செலுத்துவதிலும், உங்கள் தேவைகளைச் சந்திப்பதிலும் செலவிட்டுவிடாதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தேவனிடம் சுருக்கமாகக் கூறிவிட்டு, மற்றவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்கு ஏற்றவாறு உங்கள் விசுவாசத்தை வளரச்செய்யுங்கள். தம்முடைய உபதேசத்தைக் கேட்கும்படி வருகின்ற மக்கள் எல்லாருடைய தேவைகளைச் சந்திப்பதற்காக இயேசுவும் பிதாவின் முகத்தைத் தேடி அவரை நோக்கி ஜெபித்தார். அதன்பின் அவர்களுக்கு வசனத்தைப் போதித்து, அவர்கள்மேல் கைகளை வைத்தார். அப்பொழுது அவர்கள் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். அவர் முழுநேரமும் எங்கோ ஒரு மூலையில் போய் உட்கார்ந்து தேவனை நம்பிக்கொண்டு மாத்திரம் இருக்காமல், ஜெபித்துச் செயல் பட்டார். அவ்வாறே நீங்களும் உங்களுக்கு என்ன தேவை என்பதைத் தேவனிடம் சொல்லவேண்டியது அவசியம்தான். ஆனால், உங்கள் வாழ்வின் முக்கிய நோக்கம் மற்றவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதாக இருக்கவேண்டும்.

'உங்கள் முன்னால் வரும் எல்லாத் தேவைகளையும் சந்திப்பதற்கு தேவனுடைய ஆற்றலைப் பயன்படுத்தும் திறமைதான் உண்மையான செழிப்பு' என்பதே செழிப்பு என்பதற்குச் சரியான விளக்கம் ஆகும். தேவனுடைய அன்பு மட்டுமே மற்றவர்களுடைய தேவைக்கு முதலிடம் கொடுக்கும் ஆற்றலை உங்களுக்குக் கொடுக்கும். நம்மால் அன்பு செலுத்த முடியாத, எப்பொழுதும் முணுமுணுத்துக் கொண்டு மற்றவர்களைக் குறைகூறும் மக்களைத் தேடி அவர்கள்மீது அன்பு காட்டும்படி உங்களை உருவாக்குவதற்காகத் தேவன் உங்களை நேசிக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

உங்களை நேசிப்பவர்களை நீங்களும் நேசிப்பது கடினமல்ல. இதில் எந்தச் சிறப்பும் இல்லை. எந்தப் பாவியும் இதைச் செய்ய முடியும். ஆனால் நேசிக்கமுடியாதவர்களை நீங்கள் நேசிக்கும் போது நீங்கள் தொடர்ந்து அவர்களை நேசித்துக்கொண்டிருக் கிறீர்கள், தொடர்ந்து நேசிக்கிறீர்கள், நேசித்துக்கொண்டே இருக்கிறீர்கள். அப்பொழுது தேவனின் அன்பு அவர்களை மாற்றும்.

ஒருவேளை அதற்கு ஒரு ஆண்டு ஆகலாம், ஐந்து ஆண்டுகள் ஆகலாம், இருபத்தைந்து ஆண்டுகள்கூட ஆகலாம். ஆனாலும் அது தகுதியுடையது. உங்களுக்காக இயேசு எவ்வளவு காலம் காத்திருக்கிறார்?

தேவன் உங்களை நேசிக்கிறார், உங்களைச் சுற்றிலும் இருக்கிற எல்லா மக்களையும் அவர் நேசிக்கிறார். இரட்சிக்கப் பட்டவர்களோ அல்லது பாவிகளோ, எல்லாரையும் அவர் நேசிக் கிறார். தம்முடைய அன்பைப் பொழிகிற ஒரு கருவியாக உங்களைப் பயன்படுத்த அவர் விரும்புகிறார்.

செயலில் இறங்குவதற்குப் பயப்படாதேயுங்கள். தேவனுடைய அன்பு பயத்திலிருந்தும் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும் உங்களை விடுதலையாக்கும். பிறரை நேசிக்கும் ஆற்றலை அவர் உங்களுக் குத் தந்திருக்கிறார். தேவனின் அன்பைப் பரவச்செய்யவேண்டும் என்பதில் உறுதியாயிருங்கள். எல்லா மக்களோடும் நட்புடன் இருக்கத் தொடங்குங்கள். நட்புடன் பழகுவதோடு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள மக்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்பதையே உங்கள் இலட்சியமாகக் கொள்ளுங்கள்.

மக்களை விருந்துக்கு அழைத்து அவர்கள் உங்கள் வீட்டிற்கு வர வழிசெய்யுங்கள். புன்னகையோடு கைகுலுக்குங்கள். நீங்கள் செய்ய வேண்டுமென்பதற்காக தேவன் சிலவற்றை வைத்திருக் கிறார். உலகில்

வேறு எவரையுமே பயன்படுத்தாத முறையில் உங்களைப் பயன்படுத்த விரும்புகிறார்.

சிலரை உங்களால் மட்டுமே சந்தித்து கர்த்தரிடம் வழிநடத்த முடியும். உங்களைத் தவிர வேறுயாராலும் அவர்களைச் சந்திக்க முடியாது. அவர்களைத் தேவ அன்பினால் நீங்கள் சந்தித்து ஊழியம் செய்ய வழிநடத்துமாறு தேவனிடம் கேளுங்கள். அவர் உங்களுக்குப் போதிப்பார்.

# 7

# உள்ளங்களைத் தொடும் தேவனின் அன்பு உங்களை மாற்றும்

*“தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரரிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.”*

— 1 யோவான். 4:10

தேவன் நம்மை நேசிக்கிறார், ஆனால் எந்த அளவு தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை நம்மில் அநேகர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் எண்ணுகிறேன். தேவன் நம்மை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்பதை நாம் நம்முடைய ஆவியில் அறிந்துகொண்டால், நாம் பல சமயங்களில் இருப்பதைவிட முன்னேற்றமடைந்து மிகுந்த வித்தியாசமாக இருப்போம் என்பதைத் தேவன் எனக்கு எனது ஆய்வின்மூலம் காட்டினார்.

*தேவன் உங்கள்மீது கொண்டுள்ள அன்பைத் தியானியுங் கள்.* அதுதான் உங்களை மாற்றப்போகிறது. நீங்கள் விரும்பாத காரியம் ஏதேனும் உங்களிடம் இருக்குமானால், தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை '*நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என அறிவது*' அதை மாற்றப்போகிறது.

ஒருவர் உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் அறியும் போது எப்படி உணர்கிறீர்கள்? அது உங்களை மகிழ்ச்சியாக்கும், சரிதானே? நீங்கள் அழகற்றவர்கள் என எண்ணுகிறீர்களா? இந்தப் புத்தகத்தைப்படிக்கும் சிலர் தங்களையே வெறுக்கிறவர் கள் என்று தேவன் எனக்குச் சொன்னார். நீங்கள் செய்கிற காரியங்களை நீங்கள் வெறுப்பீர்கள், நீங்கள் புது சிருஷ்டியாய் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் தொடர்ந்து பழைய சுபாவத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள்.

எப்பொழுதும் உங்களைப்பற்றிய தாழ்வு மனப்பான்மையுடன் இருத்தல், உங்களை நீங்களே விரும்பாதிருத்தல், உங்களை நீங்களே வெறுத்தல், நீங்கள் எவ்வளவு விசேஷித்தவர்கள் என்பதை உணராமல் இருத்தல் ஆகியவை உங்களில் இருக்கும் வரை நீங்கள் சிறப்பானவர்களாக நடந்துகொள்ள முடியாது. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி. 23:7) என்று வேதம் சொல்லுகிறது. இதற்குக் காரணம் தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதை நீங்கள் உறுதியாகப் பற்றிக்கொள்ளாததுதான். அவர் எந்த அளவுக்கு உங்களை நேசிக்கிறார் என்பதை அறிந்து கொள்வது மிகவும் ஆற்றல் நிறைந்ததாகும்.

நீங்கள் தினந்தோறும் அவரோடு உறவாடவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதுதான் உங்களை மாற்றும். நீங்கள் தேவனுக்கு முதலிடம் கொடுக்காவிட்டால் அவர் உங்களுக்குச் செய்ய விரும்புவதைச் செய்யமுடியாத நிலையில் அவரை

வைத்துவிடுகிறீர்கள். தேவனை நேசித்து, அவர் உங்களை நேசிக்க இடம் கொடுத்து, நீங்கள் அவரோடு தனியாகச் செலவிடுகிற நேரமே உங்களை ஆவியில் வளர்ந்து பலப்படச் செய்யும்.

பெருவாரியான மக்கள் சோம்பலாயிருப்பதால் அவ்வாறு செய்வதில்லை. தங்களுக்காக வேறு யாராவது அதைச் செய்தால் நல்லது என்று விரும்புகிறார்கள். *சாக்குப்போக்கு சொல்லவேண்டாம்.* இதைப் படித்துக்கொண்டிருக்கிற, தேவனோடு இதுவரை ஐக்கியம் கொள்ளாத, நான் எழுதியிருக் கிறவற்றால் உணர்த்தப்பட்ட ஒவ்வொருவரிடமும் பிசாசானவன் வந்து அந்தக் உணர்த்துதலுக்குப் பின்னால் "ஆனால் நீ செய்யவேண்டிய பிற வேலைகள் அதிகம் இருக்கிறது" என்று கூறுவான்.

அது எவ்விதம் நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். பிசாசானவன் ஒன்றன்பின் ஒன்றாக சாக்குப்போக்கு சொல்லுவான் தேவனுடைய காரியத்தில் அசட்டையாயிராமல் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். *தேவனுடைய வார்த்தையும், அவரோடு நீங்கள் கொள்ளும் ஐக்கியமும் உங்களை மாற்றும்.* தேவன் உங்களைத் தகுதிப்படுத்தியுள்ளார். பிலி. 4:13 இல் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றை யுஞ் செய்ய எனக்குப் பெலன் உண்டு" என்று பவுல் கூறுகிறார். வேறுவகையில் சொன்னால், இயேசு கிறிஸ்துவின் வல்லமையின் மூலம் நீங்கள் செய்ய முடியாதது எதுவும் இல்லை என்பதாகும்.

தேவன் ஒரு பிரச்சினையை உங்களுக்குச் சுட்டிக்காட்டினால், உடனே நீங்கள் பலத்தோடும் வெற்றியோடும் எழுந்து அதை ஒன்றுமில்லாமல் ஆக்கவேண்டும். நீங்கள் எழுந்து தேவன் உங்கள்மீது வைத்திருக்கும் அன்பைப் பெற்றுக்கொண்டு, அந்த அசுத்தமான பொய் கூறுகிற பிசாசானவன் நீங்கள் எவ்வளவு மோசமானவர்கள், பயனற்றவர்கள் என்றெல்லாம் கூறுவதை ஏற்க

மறுத்துவிடுவீர்களானால், நீங்கள் வெற்றியோடு செயல்பட ஆரம்பித்துவிடுவீர்கள்.

ஒருவேளை இப்பொழுது நீங்கள் மிகுந்த அச்சத்துடன் செயல்படலாம், ஆனால் நீங்கள் உள்ளான மனிதனில் புது சிருஷ்டியாய் இருக்கிறீர்கள் என்பதை நம்பினால் நீங்கள் வேறுவிதமாகச் செயல்படுவீர்கள். நீங்கள் எழுந்து “தேவனுக்கு ஸ்தோத்திரம், நான் **விசேஷமானவன்.** நான் பரிசுத்தமானவன். தேவன் என்னைத் தெரிந்துகொண்டார். ஆட்டுக்குட்டியான வரின் இரத்தத்தால் என்னைச் சுத்தமாக்கினார். நான் இந்த அடிப்படையில்தான் செயல்படப்போகிறேன். பிசாசே, நான் எத்தனை தவறு செய்தாலும் கவலைப்படப்போவதில்லை. என்னைத் தூக்கி எடுத்து வழிநடத்துவதற்குத் தேவன் பெரியவராயிருக்கிறார். *அவர் என்னுடைய சீர்குலைவுகளை எல்லாம் சுத்திகரித்திருக்கிறார்”* என்று கூறும்வரை நீங்கள் மாறவோ அல்லது வேறு வழியில் செயல்படவோ முடியாது.

தேவன் உங்களை நேசிக்கிறார் என்பது ‘உங்களுக்குத் தெரியும் என்பதை நீங்கள் அறிந்துகொண்டால்’ எந்தப் பிரச்சினை உங்களை மேற்கொள்ள முடியும்? எதுவுமே இல்லை. நீங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொள்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெற்றவர்களாக இருக்க விரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள் வெற்றி பெறுவதற்காக ஏதாவது வேண்டும் என்று விரும்புகிறீர்களா? என்பதற்குப் பதில் கூறுங்கள். நீங்கள் வளருவதற்கு ஒரேவழி இதுதான். உங்களுக்குப் பிரச்சினைகளே இல்லை என்றால், நீங்கள் மேற்கொள்வதற்கு ஒன்றுமே இல்லை என்றால், உங்கள் விசுவாசத்தைப் பயன்படுத்தி என்ன செய்யப்போகிறீர்கள்?

உங்களுக்கு எதிராக வரும் பிரச்சினைகளை நீங்கள் வளருவதற்குக் கிடைத்த வாய்ப்புகளாகப் பயன்படுத்துங்கள். தேவன் உங்களை நேசிக்கிறபடியால் அவர் என்ன செய்யப் போகிறார் என்பதைக் கண்டுபிடியுங்கள்! நீங்கள் தேவனைச் சார்ந்து, அவர் உங்களை நேசிக்க இடம் கொடுப்பதோடு நீங்களும் அவரை நேசித்தால் விசுவாசத்தைச் செயல்படுத்தும் *முயற்சியை* மறந்துவிட்டு நீங்கள் ஓய்வாக இருக்கலாம்.

தேவன் உங்களை நேசிக்க இடம் கொடுத்து நீங்களும் அவரை நேசித்தால், நீங்கள் குடிபோதையில் இருப்பவர்கள் போன்று ஆவியில் நிறைந்து வாழலாம். நீங்கள் தேவனுடைய அன்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் வேளைகளில் உங்கள் வாழ்வின் எந்தச் சூழ்நிலையும் உங்களைப் பாதிக்க முடியாது.

நான் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்பட்டபோது, முதல் மூன்று வாரங்களுக்கு தேவனுடைய அன்பில் மூழ்கியிருந்தேன். என்னைச் சுற்றிலும் இருந்தவர்கள் என்னைப் பார்த்து, "உனக்கு என்ன நேரிட்டது? நீ வித்தியாசமாக இருக்கிறாய். ஜாய்ஸ், எங்களால் இதை நம்பமுடியவில்லை" என்று கூறினார்கள். மூன்று வாரங்களுக்குப் பிறகு இதே மக்கள் என்னிடம் வந்து, "உன் வாழ்க்கையில் என்ன நடந்தது?" என்று கேட்டார்கள்.

நான் மாறிவிட்டேன் என்று அவர்களை நம்பவைக்க நான் ஒரு வார்த்தைகூட பேசவேண்டியிருக்கவில்லை. அவர்களால் அதைக் காணமுடிந்தது. நீங்கள் தேவனுடைய அன்பில் செயல்பட்டால், நீங்கள் எப்பொழுதும் புன்முறுவலோடு இருப்பீர்கள். நீங்கள் அழகானவர்களாக மாறிவிடுவீர்கள். நீங்கள் வலிமையையும் பலத்தையும் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருக்கிற படியாலும், உங்களுடைய

எல்லாத்தேவைகளும் சந்திக்கப்படும் என்பதாலும் நீங்கள் மக்களுக்குத் தொண்டு செய்யத்தகுதி உடையவர்களாக இருப்பீர்கள்.

"*தேவன் என்னை நேசிக்கிறார்*. அல்லேலூயா, *தேவன் என்னை நேசிக்கிறார்*. நான் அவருடைய **விசேஷ**மான பிள்ளை. *தேவன் என்னை நேசிக்கிறார்!*" என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுங்கள். இப்பொழுது முன்னேறிச்செல்லுங் கள். விசுவாசத்தில் துணிவுடன் முன்னேறிச்செல்லுங்கள், அதை நம்புங்கள்.

# புது வாழ்வை அனுபவியுங்கள்

இதுவரை நீங்கள் இயேசுவை உங்கள் ஆண்டவரும் மீட்பருமாக ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், இப்போது அதைச் செய்யும்படி உங்களை அழைக்கிறேன். நீங்கள் மனமார இந்த ஜெபத்தை ஏறெடுத்தால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புது வாழ்வை அனுபவிப்பீர்கள்.

பரமபிதாவே, இயேசுகிறிஸ்து உம்முடைய குமாரனென்றும், உலகத்தின் இரட்சகரென்றும் விசுவாசிக்கிறேன். அவர் எனக்காகச் சிலுவையில் மரித்தாரென்றும், என்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும் சுமந்தாரென்றும் விசுவாசிக்கிறேன். அவர் பாதாளத்திற்குச் சென்று மரணத்தின் மேலும் பாதாளத்தின் மேலும் வெற்றி சிறந்தார்.

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் இப்பொழுது உம்முடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக் கிறார் என்றும் விசுவாசிக்கிறேன். இயேசுவே, நீர் எனக்கு வேண்டும், என்னுடைய பாவங்களை மன்னியும், என்னை இரட்சியும், என் உள்ளத்தில் வந்து வாசம் செய்யும். நான் மறுபடியும் பிறக்க விரும்புகிறேன்.

இதோ, இப்பொழுதே இயேசு உங்கள் உள்ளத்தில் வசிக்கிறார் என்று நம்புங்கள். நீங்கள் மன்னிக்கப் பட்டுவிட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டுவிட்டீர்கள், நீங்கள் பரலோகத்துக்குச் செல்வீர்கள்.

தேவனுடைய வார்த்தையைப் போதிக்கிற ஒரு நல்ல சபையைக் கண்டுபிடித்து, அதில் இணைந்து இயேசுவில் வளரத்தொடங்குங்கள். தேவனுடைய வார்த்தையை அறியாவிட்டால் உங்கள் வாழ்க்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது.. யோவா. 8:31-32 இல் "...நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்" என்று வேதம் கூறுகிறது.

தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அதை உள்ளத்தின் ஆழத்தில் பதித்துக்கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். 2 கொரி. 3:18 இன்படி நீங்கள் வேதத்தைக் கருத்தூன்றிப் படிக்கும்போது இயேசுகிறிஸ்துவின்சாயலில் மறுரூபமடைவீர்கள்.

அன்புடன்,
ஜாய்ஸ்

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் “நம்பிக்கையின் கரம்” என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org



# உங்களுக்காகத் தேவன் வைத்திருக்கும் வெகுமதியைக் கண்டுபிடியுங்கள்: நிபந்தனையற்ற அன்பு!

தேவனுடைய வல்லமை மற்றும் அன்பின் ஒவ்வொரு பகுதியும் உங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது - இன்றே! நீங்கள் மக்கள் கூட்டத்தில் ஏதோ ஒருவரல்ல. இந்த உலகட்தில் நீங்கள் மட்டுமே இருப்பதாகக் கருதி தேவன் உங்களை நேசிக்கிறார். பிரச்சினை என்னவென்றால் அநேக மக்களைப்போல நீங்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்... அல்லது உங்கள் மூளை அறிவில் தெரிந்திருந்தாலும் அதை உள்ளத்தில் உணராமல் இருக்கலாம். இப் பொழுது உங்களால் முடியும். தெய்வீக ஊக்கமளிக்கிற இந்தப் புத்தகம் உங்களுக்கு அளிக்கும் வல்லமையான செய்தி என்ன வென்றால்:

- உங்களுக்குள் இருக்கும் தேவஅன்பைக் கண்டு கொள்வது எப்படி
- நீங்கள் தேவனுக்கு உகந்தவர்கள்தானா என்று கவலைப் படுவதை நிறுத்துவது எப்படி
- தேவனுடைய அன்பின் ஆச்சரியமிக்க வெளிப்பாட்டை நீங்கள் அனுபவிப்பது எப்படி
- வாழ்க்கையின் வேதனை மிக்க சூழ்நிலைகளிலும் தேவனைக் காண்பது எப்படி
- தேவனுடைய அன்பு எவ்விதம் உங்களுக்கு என்றென்றுமான மாற்றத்தை அளிக்கும்.

தன்னுடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தின உள்ளுணர்வுகளையும் வெளிப்பாடுகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதின் மூலம், ஜாய்ஸ் மேயர், உங்களுக்கு தேவனுடைய அன்பைப் புரிந்து கொள்ளத்தக்க வேதவசனங்களையும் பிற ஞானமுள்ள சொற்களையும் அளிக்கிறார். அதன் வெளிச்சம் தனிப்பட்ட முறையில் உங்கள்மேல் பிரகாசிப்பதாக!

JOYCE MEYER MINISTRIES® | Nanakramguda, Hyderabad - 500 008